விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை (19.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

## மத்திய அரசின் மௌனம் ஏன்?

### மன்மோகனுக்கு ஜெயா கடிதம்



(சென்னை)

கடந்தாண்டு ஜெனிவாவில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகும், இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்தத் தருணத்தில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பாக இந்தியா எந்தவொரு நிலைப் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை காப்பாற்ற இந்தியா முயற்சி!

### டெக்கான் ஹெரால்ட் செய்தி

DECCAN HERALD

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளிலிருந்து இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்ற இந்தியா முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இந்திய ஊடகமான டெக்கான் ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் மீதான குற்றச்சாட்டுக்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிராகரிப்பு; அமெரிக்கா எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட 204 சிபார்சுகளில் 91ஐ இலங்கை நிராகரித்துள்ளமைக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே மேற்படி முன்மொழிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என கொழும்பு விளக்கமளித்திருந்தாலும், அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்றும் வாஷிங்டன் விசனம் வெளியிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மரணதண்டனையை நீக்கல், சர்வதேச நீதிமன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல், அரச இரகசிய தகவல்களை வெளிப்படுத்தும் சட்டவரைபுக்கு ஒத்துழைப்பு வழங்கல், ஐ.நா விசேட குழுக்களை நாட்டுக்குள் அனுமதித்தல் உள்ளிட்ட 91 சிபார்சுகளையே இலங்கை நிராகரித்துள்ளது.

அத்துடன் 3 பரிந்துரைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகம் உக்கிரம்!

## 1000 மாணவர்கள் கைது!

## ஒருவர் தீக்குளிப்பு





(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழகம் எங்கும் அரசியல் கட்சிகள் மற்றும் மாணவர்களின் போராட்டங்கள் உக்கிரமடைந்துள்ளன. மாணவர்களின் போராட்டங்களோ மத்திய அரசையே உலுப்பும் அளவுக்கு வலுவடைந்து வருகின்றன. இந்நிலையில் நேற்றைய தினம் மட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதேவேளை, மதுரையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இலங்கை அரசுக்கு தண்டனை வழங்கக் கோரி தீக்குளித்து உயிரிழந்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் பிக்கு மீது மீண்டும் தாக்குதல்

தமிழ்நாடு சென்ற இலங்கை புத்த பிக்குகளின் மீது தஞ்சாவூரிலும், திருச்சியிலும் முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த நிலையில் டில்லியில் சுற்றுலாவை முடித்துவிட்டு ஆன்மீக குழுவுடன் நேற்று சென்னை சென்ரல் ரயில் நிலையம் வந்த பிக்குவை தமிழ் உணர்வாளர்கள் தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதலில் நிலைகுலைந்து போன புத்த பிக்கு ரயில் பெட்டிக்குள் ஓடினார். ஓட ஓட அவரை விரட்டி அடித்து உதைத்தனர். பின்னர் ரயில் பெட்டியிலிருந்து குதித்து வெளியே ஓடினார். அப்போதும் துரத்தி துரத்தி வந்து அடித்தனர்.

கூட்டத்திற்குள் பிக்கு ஓடிச்சென்றபோது, பொதுமக்கள் தமிழ் உணர்வாளர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர்.

அப்போது தமிழனை அங்கே கொன்றுவிட்டு எதற்கு இங்கே வந்தீர்கள்? எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போ! தமிழ் நாட்டிற்கு மட்டும் வராதே! என்று ஒரு தமிழ் உணர்வாளர் கத்திக் கொண்டிருந்தபோது, இன்னொரு தமிழ் உணர்வாளர் மீண்டும் புத்த பிக்குவை (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்.-இலங்கை பாதுகாப்பு கலந்துரையாடல் இரத்து!

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நடைபெறவிருந்த பாதுகாப்பு கலந்துரையாடல் இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளது என இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் மார்ச் 23-ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு இந்தியாவில் நடைபெறவிருந்த பாதுகாப்பு செயலாளர்கள் மட்டத்திலான கலந்துரையாடலே இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

எனினும் இரத்து செய்யப்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இலங்கையுடனான உறவுகளுக்கு இந்தியாவிலுள்ள தமிழ்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வருடாந்தம் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் போராட்டம் தீவிரவாத தூண்டலே

### -காரியவாசம்



தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக நடைபெற்றுவரும் போராட்டங்களை தீவிரவாத நடவடிக்கை என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் கூறியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழகத்தில் இலங்கைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

## கடன் பெறுவது சாப்பிடுவதற்கல்ல!

### மத்தலயில் ஜனாதிபதி உரை

நாங்கள் சர்வதேசத்திடம் கடன் பெறுவது சாப்பிடுவதற்காக அல்ல. நாட்டின்அபிவிருத்திகளை மேற்கொள்ள சர்வதேசத்திடம் கடன்களை பெறுகின்றோம். ஆனால் சிலர் விமர்சனம் செய்து வருகின்றனர். இதன் ஒரு அங்கமாகவே சர்வதேச விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தல ராஜபக்ஷ விமான நிலையத்தை நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை விவகாரம் குறித்து சோனியா இன்று ஆலோசனை

(டில்லி)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்து சோனியா காந்தி ஆலோசனை நடத்தவுள்ளார்.

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் பொதுக்குழு சோனியா காந்தி தலைமையில் டில்லியில் இன்று கூடுகிறது.

இதில் கட்சி எம்.பிக்கள் கலந்து கொள்கின்றனர். இதில் இலங்கை அரசியல் சூழல் குறித்து விவாதிக்கப்படவிருக்கிறது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமை அமைப்பில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

தீர்மானத்தில் திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் இல்லா விட்டால் ஐ.மு.கூட்டணியில் தி.மு.க. நீடிக்காது என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் என்ன முடிபை எடுப்பது என்பது குறித்து காங்கிரஸ் எம்.பிக்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது.

கூட்டத்தில் காங்கிரஸ் நிலையை சோனியா காந்தி அறிவிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் துணைத்தலைவராக ராகுல் காந்தி நியமிக்கப்பட்ட பின்னர் நடக்கும் கட்சியின் முதல் எம்.பிக்கள் கூட்டம் இதுவாகும். (செ-11)

# தாலிக்கொடி திருடிய இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடி திருடிய குற்றச்சாட்டின் பேரில் இரு இளைஞர்களை யாழ்.பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர். குருநகர் பகுதியில் வைத்து இரண்டு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு அவர்களிடமிருந்து தாலிக்கொடிகள் இரண்டு மீட்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவருக்கு 19 வயது மற்றையவருக்கு 21 வயது என் பது குறிப்பிடத்தக்கது. (செ-6)






# குத்தகை வாகனத்துடன் ஒருவர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

கட்டுக்குத்தகைக்கு வாகனம் ஒன்றை எடுத்துச் சென்ற நபர் ஒருவர் வாகனத்துடன் தலைமறைவாகியுள்ளார். திருகோணமலையில் வசித்துவரும் கந்தசாமி செந்தூரன் என்பவரது வெள்ளைநிற மகேந்திரா மக்ஸ்ரக் (இலக்கம் ETPT 9762) என்ற வாகனமே இதில் களவாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த ரி.அற்புதராஜா என்பவரே தனது வாகனத்தை போலியான ஆவணங்களை சமர்ப்பித்து விட்டு கையாடல் செய்துள்ளதாக வாகன உரிமையாளர் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரு நாட்களில் வாகனத்தை ஒப்படைப்பதாக கூறி எடுத்துச் சென்றபோதும் ஒரு மாதமும் ஒன்பது நாட்களும் கடந்துள்ள நிலையில் வாகனம் பற்றிய எவ்வித தகவல்களும் தெரியவரவில்லை என அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-8)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி/2739)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER



## சிவபூசை செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை

தீவகத்தில் சிவாலயம் ஒன்றில் தங்கியிருந்து பூசை வழிபாடு செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை. ஒன்றுக்கு மேற்பட்ட துறவிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் துறவறசபை அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளும் வழங்கப்படும்.

பொருத்தமானோர் தொலைபேசி இலக்கம் (இருப்பின்) மற்றும் தபால் முகவரி அடங்கிய சுயவிபரத்தை:

விளம்பர இல:- C-2732
மே/பா: வலம்புரி
இல 3, 2-ம் ஒழுங்கை.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

- ஆலய நிர்வாக சபை



## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(4-2595) தொடர்புகளுக்க: இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


### கோடரி வெட்டு; இருவர் வைத்தியசாலையில்

(அல்வாய்)

அல்வாய் வடக்கில் நேற்று மாலை இடம் பெற்ற கைக் கோடரி வெட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் பலத்த வெட்டுக்காயத்துக்கு இலக் காகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலையத்திற்கு முன்பாக மேற்படி வெட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அல்வாய் வடக்கினைச் சேர்ந்த சந்திரலிங்கம் சாந்தன் (வயது19), நற்குணராசா சுதன் (வயது 21), என்ற இருவருமே வெட்டுக் காயத்துக்கு இலக் கானவர்களாவர்.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். (செ-24)

# ஆயிரம் இடைநிலை திட்டத்தில் நியமனம் பெற்ற பட்டதாரிகள்

(கொழும்பு)

மத்திய கல்வி அமைச்சின் ஆயிரம் இடைநிலைப்பிரிவு பாடசாலை திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி நியமனம் தொடர்பாக கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்கள் தங்களது நியமனம் தொடர்பான ஆவணங்களுடன் (மூலப்பிரதி மற்றும் அவற்றினது போட்டோ பிரதி) - இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் செம் மணிவீதி நல்லூரில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். இதன்பிரகாரம் நியமனம்பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,

பி.வானதி பூநாறி லேன் கொக்குவில் மேற்கு, எஸ்.தாரிணி 186, நாவலர் வீதி யாழ்ப்பாணம், எஸ்.லாவண்யா செல்வகிரி அளவெட்டி தெற்கு, கே.மதுமிதா துன்னாலை மேற்கு, எஸ்.கார்த்திகா சக்கலாவத்தை கரணவாய் வடக்கு, சி.பி. யே.எம்.நிலானி முருங்கன் பிட்டி, எஸ்.கிருஸ்ண சாந்தி குரும்பைகட்டி புலோலி தென்மேற்கு. (மேலும் நியமன விபரங்கள் உள்ளே) (செ)

# வயோதிப பெண்ணைத் தாக்கிவிட்டு 12 பவுண் நகை, பணம் அபேஸ்!

(யாழ்ப்பாணம்)

வீட்டின் புகைக்கூட்டின் ஊடாக முகமூடி அணிந்து உள்நுழைந்த 4 பேர் கொண்ட திருட்டுக் கும்பல் வீட்டில் உள்ள வயோதிப் தம்பதியினரை தாக்கிவிட்டு 12 பவுண் தங்க நகையையும், 30 ஆயிரம் ரூபாபணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கண்டிவீதி அரியாலை நெடுங்குளப் பகுதியில் அமைந்துள்ள வீட்டில் இடம் பெற்றுள்ளது.

இதில் சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு, 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றோடு சேர்த்து இதன் மொத்தப் பெறுமதி 6 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாயாகும். திருட்டுச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரான தனராஜா தேவகி(வயது71) என்ற வயோதிப் பெண்மணியால் இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-6)

# அவசர அழைப்பு சாதனம் யாழ். போதனாவில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியாசாலையின் புதிய கட்டித்தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த அவசர அழைப்பு இலத்திரனியல் சாதனம் திருட்டுப்போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 13 ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்ட மேற்படி கட்டிடத் தொகுதி சுமார் 2 ஆயிரத்து 800 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஜப்பான் நாட்டினால் நிர்மாணிக்கப்பட்டது.

இந்தக் கட்டிடத் தொகுதியிலுள்ள மலசல கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த மேற்படி சாதனமே கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதனை யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் உறுதிப்படுத்தியிருந்தார்.

அத்தோடு பொதுச்சொத்துக்களை அபகரித்து செல்பவர்களை ஒரு போதும் மன்னிக்க முடியாது எனவும், குறித்த சாதனம் திருட்டுப் போனது தொடர்பில் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ-6)

## UNIVERSITY OF JAFFNA

### FACULTY OF AGRICULTURE
### ADMISSION OF PUBLIC OFFICERS
### FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2011/2012)

Application will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2011 / 2012.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.50/- cash at the Shroff Counter or People's Bank University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50/- drawn in favour of the Bursar, Envelope (for Rs.5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 31st March 2013.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application

12.03.2013 (C-2737) REGISTRAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இல்லறத்துறவி

"இல்லற வாழ்க்கை பிடிக்கவில்லை சேர்! பேசாமல் துறவி வேடம் பூண்டுகொள்ளலாம்" என்று ஒருவர் கூறினார்.

"அப்படியே செய்யவேண்டியதுதானே" என்றார்.

"அதுதான் பார்க்கிறேன்... ஆனால், மனைவி, பிள்ளைகள் விடமாட்டேன் என்று சொல்கிறார்கள். அதுதான் இடைஞ்சலாக இருக்கிறது" என்றார்.

"துறவு வேடம் என்றால் ஒரு காவி வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு, தாடியை நீளமாக வளர்த்துக் கொண்டு காடு எங்கேயிருக்கிறது?" என்று தேடிக் கொண்டு போய் ஒரு நல்ல இடமாக உட்கார்ந்து கொள்வதென்று பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் பிழையான கருத்தாகும்.

துறவியாகப் போவது என்பது ஒரேயடியாக சாமியாராக மாறுவது இல்லை.

இல்லறத்திலே இருந்து கொண்டு கூட துறவியாக இருக்கமுடியும். அப்படி முடியும் என்று நிரூபித்துக் காட்ட அந்தக் காலத்திலே ஒருவர் இருந்தார். அவர்தான் சீதையினுடைய தந்தையான ஜனகர் .

மிதிலா நகரிலிருந்த பல முனிவர்கள் இதை நம்பவில்லை. ஜனகர் மேலே அவர்களுக்கெல்லாம் சந்தேகம்.

"அது எப்படி? இவர் இராஜபோகங்களுக்கு மத்தியிலே சுகமாக இருக்கிறவர், எப்படி துறவியாக இருக்கமுடியும்?" என்று அவர்களுக்குள் ஒரு முணுமுணுப்பு.

இச்சந்தேகக் கேள்வி ஜனகர் காதிலே எப்படியோ போய் விழுந்து விட்டது.

இந்த முனிவர்களுக்கு "துறவு" என்றால் எப்படி என்பதை புரிய வைக்கவேண்டும் என்று முடிபு செய்தார்.

மறுநாளே அரண்மனையில் இருந்து ஒரு நபர் இந்த முனிவரைத் தேடிப் போனார்.

"நாளை மதியம் இந்த ராஜா உங்கள் எல்லோருக்கும் ஒரு விருது வைக்கப்போகிறார். நீங்கள் அதிலே கலந்து கொள்ளவேண்டும்" என்றார்.

அந்த முனிவர்கள் நல்ல சாப்பாட்டை கண்ணாலே பார்த்தே நீண்ட நாளாகி விட்டது. அப்படி இருக்கும் போது அரண்மனை விருந்து என்றால் வேண்டாம் என்று சொல்வார்களா?

அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்திலே அனைவரும் அரண்மனை விருந்து மண்டபத்திலே ஆஜர்; 50 முனிவர்களுக்கும் 50 இலை போட்டு பல விதமான சாப்பாடுகள் பரிமாற இருந்தார்கள்.

ஆனால், ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கவிடப்பட்டிருந்தது.

அது எப்போது சாப்பாட்டிலே விழுமோ என்ற ஏக்கத்திலே முனிவர்கள் சாப்பிட்டார்கள்.

அனைவரும் சாப்பிட்டு முடிந்த பின்னர் ஜனகர் அங்கு வந்தார். முனிவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்.

சாப்பாடு தொடர்பாக விசாரித்தார். இதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

மீண்டும் காட்டமாகக் கேட்டார்.

உடனே முனிவர்கள் வாய்திறக்க ஆரம்பித்தார்கள்.

"எப்படி சொல்ல முடியும்?" எங்கள் நினைவு பூராகவும் சாப்பாட்டில் அல்ல; தலைமுடி எப்போது சாப்பாட்டில் விழும் என்பதாக இருந்தது...

இப்போது ஜனகர் சொன்னார்; "அதேமாதிரித்தான் நானும் உள்ளேன். பிரமத்தையே நினைத்துக் கொண்டிருக்கின்ற எனக்கு இந்த இராஜபோகங்கள் சுகமா, இல்லையாவென்று கேட்டால் சொல்லத் தெரியுமா? என்றார்.

முனிவர்களுக்கு அதன்பின்தான் ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒருவர் எங்கே இருந்தால் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தான் முக்கியம்.

இல்லறத்திலே இருந்து கொண்டு பிரமத்தை நினைப்பவர்களும் உண்டு. துறவறத்திலே இருந்து கொண்டு இல்லத்தை நினைப்பவர்களும் இருக்கிறார்கள். நினைவு தான் முக்கியம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யாழின் நான்கு கிராமங்களில் மீன்பிடிக்க பாஸ் நடைமுறை

## யாழ். க.தொ. கூ.ச. சமாசம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மாதகல், சுழிபுரம், காரைநகர், குருநகர் ஆகிய நான்கு பிரதேசங்களிலும் கடற்தொழிலுக்கு செல்வோருக்கு பாஸ் வழங்கும் நடைமுறை தற்போதும் உள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள மாதகல், காரைநகர், சுழிபுரம், குருநகர் ஆகிய நான்கு பிரதேசங்களைத்தவிர ஏனைய பிரதேசங்களுக்கு கடற்றொழிலாளருக்கு வழங்கப்பட்டு வந்த பாஸ்நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்குறிப்பிட்ட நான்கு பிரதேசங்களிலும் நடைமுறையில் பாஸ் வழங்கும் நடவடிக்கையும் படிப்படியாக நீக்கப்படும். இது தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்தினவிடம் தெரியப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கடற்தொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி மேற்கொண்டுள்ளார் .மேலும் கடற்தொழிலாளருக்கான பாஸ் கொடுக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம் பெறுவதனால் மீனவர்கள் பாதிப்படைவ தாக தெரிவித்த அவர் விரைவில் பாஸ் நடைமுறை நீக்கப் படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை வடமாகாணத்தில் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாஸ்நடைமுறை முற்றாக நீக்கப்பட்டு விட்டதாக வடமாகாண கடற்படைகளின் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் உடவத்த கடந்த 8 ஆம் திகதி பொன்னாலை கடற்படை முகாமில் இடம் பெற்ற கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச ஊழியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

ஆனால் வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் நான்கு இடங்களில் பாஸ் நடைமுறை தற்போதும் உள்ளதாக சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# யாழ். போதனாவில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரின் கையடக்கத் தொலைபேசி திருட்டுப் போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் போதனா வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதியில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான சாம்சூங் ரக கையடக்கத் தொலைபேசியே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் குறித்த வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இவர் சிங்கள வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சுடுதண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட இதர பொருட்கள் திருட்டு போவது தொடர்ந்து இடம்பெற்றுவருகிறது. (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 120 |
| தக்காளி | 50 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 50 | 30 | 60 | 50 |
| கரட் | 100 | 100 | 140 | 120 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-80 | 70 | 80 | 50-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 70 | 120 | 120 |
| கறிமிளகாய் | 120 | 110 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 80 |
| போஞ்சி | 100 | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 | 35 |
| தேசிக்காய் | 60-90 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 80-120 | 90 | 120 | 100 |
| வெங்காயப்பூ | -- | 160 | 160 | --ள |

# இராசி பலன்

19.03.2013
(பங்குனி 06, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
சப்தமி முற்பகல் 9.35மணிவரை
அட்டமி முற்பகல் 9.36 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 1.25 மணிவரை
இராகுகாலம் 3.18-4.48 மணிவரை
சுபநேரம் 10.48-12.18 மணிவரை

**மேடம்** சவால்களைசமாளித்து வெற்றி காண்பீர்கள்,சகோதரர்கள் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்** ஆன்மீக சிந்தனை மோலோங்கும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் திருப்தி தரும் வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள் , ஆரோக்கிய நலன் கருதி கவனமெடுக்க வேண்டிய நாள்.

**கடகம்** இடமாற்றம் ஊர் மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி மூலம் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணவிரயங்கள் கூடும், வழிபாட்டால் அமைதி காணவேண்டிய நாள்.

**சிங்கம்** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள் , பதவி உயர்வுகள் ஏற்படலாம், கௌரமான நாள், காரிய அனுகூலமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கன்னி** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அந்நியர் உதவி உண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்** உடல் உழைப்பில் ஈடுபாடு காட்டுவீர்கள், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும், தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** எதிர்பாராத அச்சங்கள் ஏற்பட இடமுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், இஷ்ட தெய்வத்தை வழிபாட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**தனுசு** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், தொழில் நன்மையுண்டு.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், சொத்துக்கள் தொடர்பில் ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்,தொலைபேசி மூலம் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், கல்வியில் மேன்மையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு கும்பலுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் சிறுவன் ஒருவரின் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்த கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த 4 பெண் சந்தேக நபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் கடந்த 15 ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் இருந்து திருமண நிகழ்வுக்காக வந்திருந்த 5 வயது சிறுவனின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

உசாரடைந்த பொலிஸார் உடனடியாக ஆலயத்திற்கு விரைந்து சம்பவத்துடன் தொடர்புடைய இரு பெண் சந்தேக நபர்களை கைது செய்தனர்.


பின் பொலிஸார் மேற்கொண்ட புலன் விசாரணையின்போது மேலும் இரு பெண்களை கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவர்களிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையின்போது பொலிஸாருக்கு திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன.

நாம் ஆலயத்திருவிழா காலங்களில் இவ்வாறு பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து 4 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)







## சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்



கந்தசாமி நாக ஜெயகுமாரன் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று யாழ்.மாவட்டநீதிமன்றத்தில்மாவட்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில்அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியரும் கல்வி சமூக மேம்பாட்டுக்கழக தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்க முன்னாள் தலைவரும் ஆவார்.(அ-5)

## மாணவன் காணாமல் போனமை குறித்து முறையிடப்படவில்லை

(யாழ்ப்பாணம்)


மத்திய கல்லூரி மாணவன் கடத்தப்பட்டமை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை என இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.


யாழ்.மத்திய கல்லூரி மாணவனான அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த முத்துலிங்கம் கோகுலன் (வயது 11) என்ற மா்ணவன் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டான் எனவும் அந்த மாணவனை பூநகரிப் பிரதேசத்தில் இருந்து மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்ததாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த மாணவன் கடத்தப்பட்டது தொடர்பில் முறைப்பாடு ஏதாவது பதிவு செய்யப்பட்டதா என மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (அ-6)

# கைதடி பாலத்தில் வாகன விபத்து

## சாரதியின் இரு கால்களும் கவலைக்கிடம்





(படங்கள்:- எம்.கௌரிகாந்தன்)

மரக்கறி ஏற்றி வந்த வாகனத்துடன் டிப்பர் வாகனம் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மரக்கறி வாகனத்தில் பயணித்த சாரதி படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கைதடி பாலத்தடியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, தம்புள்ளவில் இருந்து மருதனார்மடத்திற்கு மரக்கறி ஏற்றி வந்த வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனமும் ஒன்றை ஒன்று விலத்திச் செல்ல முற்படுகையில் மோதுண்டதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்குறித்த பாலத்தடியில் உள்ள அடித்தகடு நீண்ட நாட்களாக வெடிப்புடன் காணப்படுகின்றது. அத்துடன் அங்கு வைக்கப்பட்டுள்ள பரலுக்கும் அபாய எச்சரிக்கை போடப்படாமையினாலேயும் இவ்விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் மன்னாரைச் சேர்ந்த சாள்ஸ் டொன் (வயது 33) என்ற நபரே 2 கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்திற்கு பாலத்தின் தகடு வெடித்துள்ளமையே காரணம் என அங்கு நின்றவர்கள் பேசிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3)

# மஹோற்சவம்

(சித்தன்கேணி)

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சண்முகர் அர்ச்சனையும் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 11.30 மணிக்கு சுவாமி தேர் உலா ஆரோகணம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை மாலை 3 மணிக்கு பூங்காவனமும் 30 ஆம் திகதி சனிக்கிழமை 8 மணிக்கு கும்பாபிஷேக தினத்தையொட்டி சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.(அ-3-17)

# மீள்குடியேறி 3 வருடங்களாகியும் அடிப்படை வசதிகள் கூட இல்லை

## அரியாலை கிழக்கு மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.


கடந்த 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தப் பகுதியில் சுமார் 38 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டதாகவும் தற்போது சுமார் 50 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 150 குடும்ப அங்கத்தவர்களை கொண்டுள்ள அரியாலை கிழக்கில் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. இந்நிலையில் குறித்த பகுதிக்கான போக்குவரத்தும் அண்மையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவுள்ளதால் இந்தப் பகுதிக்கான பேருந்துப் போக்குவரத்து இடைநிறுத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிப்படை வசதிகளற்ற நிலையில் மீள்குடியேற்றப்பட்டு மூன்று வருடங்களுக்கும் மேலாக அரியாலை கிழக்கு மக்கள் அந்தரித்து வருகின்றனர் என சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-6)








இலங்கை வங்கி இரண்டாம் மேற்தரக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினம் கடந்த 8 ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைவுசார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல்

## ஐந்தாண்டு திட்டம் நடைமுறைக்கு- யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டவர்கள் எதிர்பார்க்கும் யாழ். மாவட்டத்தை உருவாக்கும் நோக்குடன் விளைவு சார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல் என்னும் தொனிப் பொருளில் 5 ஆண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இந்தத் திட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகாலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விளைவு சார் மற்றும் அழகுபடுத்தல், போக்குவரத்தை சீர்படுத்துவதோடு இலகு படுத்தல் போன்ற பல மாற்றங்களும் அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு இலக்கு நோக்கிய திட்டமிடல் என்னும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த 5 ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக விவசாயம், பால் உற்பத்தி, வீதி புனரமைப்பு, நகருக்கான உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத் திக் கொடுக்கவும் சந்தைப் படுத்தலுக்கான வசதிகளையும் உருவாக்கி நலிவடைந்து செல்லும் யாழ். குடாநாட்டின் விவசாய உற்பத்தியை விருத்தி செய்ய பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்தோடு பால் உற்பத்தியை அதிகரிக்கவும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் கொழும்பு மாநகரம் போன்று யாழ். நகரத்தையும் வெளிநாட்டவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு மாற்றுவதற்கான பல நடவடிக்கைகளும் இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக , யாழ். நகரத்திலுள்ள மத்திய பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி நகரில் ஏற்பட்டுள்ள சனநெரிசலையும் வாகன நெரி சலையும் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளதோடு யாழ். மாநகர சபையுடனும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

உடனடியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்தை அவ்விடத்தை விட்டு அகற்றாவிடினும் கட்டம் கட்டமாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்தோடு யாழ். நகரில் வைத்தியசாலை வீதியின்நடுவேஉள்ள வாகனத்தரிப்பிடம் போக்குவரத்திற்கு பாரிய இடையூறாக வுள்ளது.

அவ்வாறுள்ள வாகனத்தரிப்பிடத்தையும் அகற்றி நகரை அழகுபடுத்தி வெளிநாட்டவர்கள் எதிர்ப்பிற்கும் யாழ். குடாநாட்டை உருவாக்க 5 ஆண்டுத்திட்டத்தின் ஊடாக பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்தை கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்ததாக வெளிநாட்டவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் அவர்களின் எதிர்ப்புக்களுக்கு ஏமாற்றமளிப்பதாக யாழ். மாவட்டம் உள்ளது எனவும் வெளிநாட்டவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ். மாவட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அத்தோடு யாழ். மாவட்டம் யுத்தத்திற்கு பின்பு பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி அடைந்துள்ளது. பல முன்னேற்றகரமான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**புதுமுக மாணவர்களைப் பதிவு செய்தல்**

கல்வியாண்டு 2011/ 2012 இற்கான மாணவர் பதிவினை இன்னும் மேற்காள்ளாதவர்கள் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை அனுமதிகள் கிளையில் பின்வரும் திகதிகளில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

| | கற்கைநெறி | திகதி |
|---|---|---|
| 1 | கலை, சட்டம், இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் | 22.03.2013 வெள்ளிக்கிழமை |
| 2 | பௌதீக விஞ்ஞானம் உயிரியல் விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம் | 23.03.2013 சனிக்கிழமை |
| 3 | முகாமைத்துவம், வணிகம் | 25.03.2013 திங்கட்கிழமை |
| | விவசாயம், சித்த மருத்துவம், தாதியியல், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் | 27.03.2013 புதன்கிழமை |

பதிவாளர் (சி/2735)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**விவசாயபீடம்**

**புதுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்**

விவசாயபீடத்திற்கு 2011/ 2012 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 03.04.2013 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு விவசாயபீட் பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

15.03.2013 பதிவாளர் (சி/2736)



QP மூலம்
சவுதி அரேபியாவுக்கு
பலதியா
சுத்தீகரிப்பாளர்கள்
உடனடி வேலைவாய்ப்பு
இலங்கையிலிருந்து பயணிக்க பணம்தேவையில்லை
சம்பளம் - SR 650/- (1 SR = Rs.35/-)
பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.
Terms & Conditions:
- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உப்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரே வரவும்.
தொடர்புகளுக்கு: 0112 681515 / 0112684433
QP Employment (pvt) Ltd,
No.06, Campbell Terrace, Punchi Borella, Colombo -10.
Tel: 0112 681212, 2684433, 2681515 e-mail: admin@qpjobsonline.com
AL/1316 Advt:/04/13 (அ/2693)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1953 இந்து வேளாளர் நட்சத்திரம்: பூராடம் உயரம்: 5'6" தகைமை/தொழில்:அவுஸ்திரேலியா-PR எ.பா:- சாதகம் பார்ப்பதில்லை தொ.இ: B -450 | பிறப்பு: 1973 இந்து வேளாளர் நட்சத்திரம்: உத்தரட்டாதி 3 உயரம்: 5'4" கி.பா: 54.5, 7 இல் செவ் தகைமை/ தொழில்: A/L ஆசிரியர் (விவாகரத்து பெற்றவர்) எ.பா: விவாகரத்தானவர் ஏற்கப்படும் தொ.இ: G -035 |
| பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம் 4 உயரம்: 5'5" கி.பா: 22, 4 செவ் தகைமை/தொழில்: மிருக வைத்தியர் தொ.இ: B -453 | பிறப்பு: 1981 றோ.க உயரம்: 5'2" தகைமை/ தொழில்: A/L ஆசிரியர் (தனியார்) தொ.இ: G-074 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர் நட்சத்திரம்: கார்த்திகை 4 கி.பா:29.5, 4 இல் செவ் உயரம்: 6'1" தகைமை/ தொழில்: Computer BAC, (UK not-PR) தொ.இ: B -454 | பிறப்பு: 1974 இந்து வேளாளர் நட்சத்திரம்:விசாகம் 4 உயரம்: 5'4" கி.பா:13.75, 2 இல் செவல் தக்கமை/ தொழில்: BLE முகாமைத்துவ உதவியாளர் தொ.இ: G -079 |
| பிறப்பு: 1976 இந்துவேளாளர் நட்சத்திரம்: உத்தரம் 3 உயரம்: 5'6" கி.பா: 37, 4 இல் சூரி, செவ் தகைமை/தொழில்: A/L, Computer Diploma, (ஆசிரியர்) தொ.இ: B -455 | பிறப்பு: 1978 இந்து வேளாளர் நட்சத்திரம்: சதயம் 1 உயரம்:5' கி.பா: 27, 4 இல் செவ் தகைமை/ தொழில்: A/L தொ.இ: G -086 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் எரிபொருள் அகழ்வில் 50 வீதமே வெற்றியளித்துள்ளது

## அகழ்வாராய்ச்சி நிபுணர்கள்

(மன்னார்)

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட எரி பொருள் மற்றும் இயற்கை எரிவாயு அகழ்வு நடவடிக்கைகள் 50 வீதம் வெற்றியளித்துள் ளதாக அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் தெரிவிக் கின்றனர்.

இலங்கை பெற்றுள்ள இந்த வெற்றி வீதம் சிறப்பானதென்றும் இயற்கை எரிவாயு மற்றும் எரிபொருள் தொடர்பான எதிர்கால நம்பிக்கையை இதன்மூலம் தக்கவைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இதுவரையில் நான்கு எரி பொருள் கிணறுகளில் அகழ்வுகள் மேற்கொள் ளப்பட்ட நிலையில் அவற்றில் இரண்டு கிணறு களில் ஹைதரோகாபன் எரிவாயு கண்டு பிடிக்கப்பட்டது.மன்னாரில் எரிபொருள் அகழ் வுகளில் ஈடுபடும் கெய்ன் லங்கா நிறுவனத்தின் தொடர்பாடல் பிரதானி கலாநிதி சுனில் பாரதி கருத்து தெரிவிக்கையில்,

ஹைதரோகார்பன் வளமுள்ள நாடுகள் வரி சையில் இலங்கை முன்செல்ல பல் வேறு வழிகள் உள்ளன. எமக்கு தேவையாயின் மூன் றாவது கட்ட அகழ்வுகளுக்கு செல்லும் வாய்ப் புண்டு.

அதன் மூலம் இன்னும் ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்கு அகழ்வு பயணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

இல்லாத பட்சத்தில் இதுவரையில் மேற் கொண்ட அகழ்வு பணிகளின் மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் அப்பகுதிகளில் இரு க்கக்கூடிய எரிவாயு வின் அளவை கணிப்பிட லாம்.

தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள எரி வாயு வின் வர்த்தக பெறுமதி தொடர்பாக மதிப்பீடுக ளைமேற்கொள்ள ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுகள் வரை காத்திருக்க வேண் டும். வர்த்தக ரீதியான ஹைதரோகார்பன் உற்பத்தியை மேற்கொள்வதாயின் இன்னும் மூன்றாண்டுகள் தேவைப்படும் என குறிப் பிட்டார்.

இலங்கையில் மேற்கொள்ளும் அகழ்வு நடவடிக்கைகளுக்கு இணையாக கெய்ன் நிறு வனம் இந்தியாவின் ராஜஸ்தானிலும் ஹைத ரோகார்பன் உற்பத்திகளை மேற் கொள்கி றது.

கெய்ன் நிறுவனம் இந்தியாவில் மேற் கொள்ளும் எரிவாயு உற்பத்தி மின்சக்தி துறைக்கே பயன்படுகின்றது. ராஜஸ்தானில் ஹைதரோகார்பன் உற்பத்தியை மேற்கொள் ளும் நிறுவனம் நாளாந்தம் ஒரு மில்லியன் கனமீற்றர் இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்வதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த ஆண்டு 73 வழக்கு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் முத்திரையிடாத நிறுத்தல் அளவைகளை வைத்திருந்த 9 வர்த்தகர்களுக்கு எதிராக இன்று வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக இத்திணை க்களத்தின் வவுனியா, மன்னார், முல்லைத் தீவுக்கான பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக் கையில்,

அனைத்து வர்த்தகர்களும் நிறுத்தல் அள வைகளுக்கு முத்திரையிடுவதை தவறாது மேற்கொள்ள வேண்டும். 2012 ஆம் ஆண்டு வவுனியாவில் 73 வழக்குத் தாக்கல் செய்யப் பட்ட நிலையில் 56 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு ஒரு இலட்சத்து 85 ஆயிர த்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டது டன் ஏனைய வழக்குகள் நிலுவையில் உள் ளன.

இவ்வருடம் ஜனவரி மாதம் 7 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 12 ஆயிரம் ரூபா தண் டம் அறவிடப்பட்டதுடன் 4 வழக்குகள் நிலு வையில் உள்ளதாகவும் பெப்ரவரி மாதம் வவு னியாவில் 17வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் 42 ஆயிரம் ரூபா தண்டமும் மன்னாரில் 17 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதில் 32 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் அறவிட ப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (அ-2-266)

# மோசடிக்காரர் குறித்து விழிப்புடன் இருங்கள்

## யாழ். மாவட்ட அமைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் உயர் சம்பளத்துடன் வேலை வாய்ப்பினைப் பெற்றுத்தருவதாக கூறி யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நபர் ஒருவர் தலைமறைவாகியுள் ளார் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமை ப்பாளர் கமலேந்திரன் அறிக்கையொன்று அனுப்பி வைத்துள்ளார்.


நீர்கொழும்பில் வசிக்கும் சிவநாதன் அன் ரன் சியாம் குமார் எனும் குறித்த நபரே இவ் வாறு ஆறு இளைஞர்களிடமும் பெருந் தொகயான பணத்தை மோசடி செய்து தற்போது தலைமறைவாகியுள்ளார்.

எனவே இந்நபர் தொடர்பான தகவல் களை அறிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக தெரியப் படுத்தும் அதேவேளை, எதிர்காலங்களில் இவ்வாறான ஏமாற்றுக்காரர்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தற்போதுள்ள அமைதிச்சூழலை பயன் படுத்தி வெளிநாடுகளில் அதிக சம்பளத்து டன் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத் தரு வதாக கூறி இளைஞர், யுவதிகளை ஏமாற் றும் நடவடிக்கைகள் அரங்கேறி வருகின் றன.

இந்நிலையில் குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் இளைஞர்கள், யுவதிகளிடமிருந்து பெருந்தொகையான பணத்துடன் மோசடிக் காரர்கள் தலைமறைவாகும் சூழ்நிலையிலும் காசோலை மோசடிகள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்கு மாறும் பொதுமக்களை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கேட்டுக்கொண் டுள்ளார். (அ-6)

# தாண்டிக்குளத்தில் விபத்து; மூவர் வைத்தியசாலையில்



(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல் லூரிக்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத் தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவு னியா பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஏ9 வீதி-தாண்டிக்குளத்தில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

தாண்டிக்குளம் பகுதியிலுள்ள உணவகத் திற்கு சென்று விட்டு ஏ-9 வீதியில் நுழைய முற்பட்ட ஆட்டோ ஒன்றுடன் வவுனியா நகரில் இருந்து தாண்டிக்குளம் நோக்கி சென்ற மோட்டார்சைக்கிள் மோதியதுடன் மோதிய மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழ ந்து எதிர் திசையில் தாண்டிக்குளத்தில் இருந்து வவுனியா நகரை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள்,துவிச்சக்கரவண்டி என்பவற்றுடன் மோதியுள்ளது.

பாடசாலை மாணவன் ஒருவரால் செலுத்தி வந்ததாக தெரிவிக்கப்படும் குறித்த மோட்டார் சைக்கிள் மிக வேகமாக வந்த நிலையில் கட்டுப்பாட்டை இழந்தே முச்சக்கரவண்டி மற்றும் ஏனையவற்றுடனும் மோதுண்டுள்ளதாக நேரடியாக விபத்தை பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை விபத்தின் காரணமாக மூவர் வைத்திய சாலை விபத்துக் கள் பிரிவில் அனு மதிக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரத்தினால் தெரி விக்கப்பட்டது.இச்சம்பவம் தொடர்பில் பொலிசார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள னர். (அ-2-266,250)

# ஆயிரம் இடை நிலை திட்டத்தில் நியமனம் பெற்ற பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி அமைச்சின் ஆயிரம் இடை நிலைப் பிரிவு பாடசாலை திட்டத்தின் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளி யிடப்பட்டுள்ளன.

மேற்படி நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 பத்திரமுல்லை பெலவத் தையிலுள்ள மத்திய கல்வி அமைச்சு ஜனகலாகேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே நியமனம் பெற்றவர்கள் தவறாது நேரத்துடன் வருகைந்து நியமனக்கடிதத்தை பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண கல்விச் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித் துள்ளார்.

இதன் பிரகாரம் மேற்படி இடை நிலைப் பிரிவு பாடசா லைத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,

திருமதி. கருணானந்தன் பாலினி, ஆரணி பில்ல மங்களம், திருமதி. விஜிதன் ஹேணுகா, நர்மதா நகேந் திரராசா, தபோதினி வேலுப்பிள்ளை, றிஸானாபேகம் முகம்மது ஹனீபா, திருமதி தர்சிகா சியாமளரூபன், கயேந்திரன் கணேசலிங்கம், இராசையா கமலதாசன், திருமதி. அன்ரன் பிரான்சிஸ் அனற்பொப்சி லோகேஸ் வரன் செந்தூரன், ராஜேந்திரா சசீலன், மேரிசிபானி அல் போன்ஸ் குரூஸ், திருமதி துளசி சிறீதரன், திருமதி அனு ராதா மதன், யசோதரா பில்வமங்களம், தேவகி செல் வநாதன், நடராசா தமிழ்ச் செல்வன், சோபர்னா இராசு குரு, வினுஜா தாமோதரன், துவாரகா விவேகானந்தன், சியாமளா பத்மநாதன், கவிதா இராசேஸ்வரன், சிவராசா தினேஸ்குமார்.

திருமதி முகம்மது சாஹால் ஹமீது ஸாஜிதா, கிருஷ் ணமூர்த்தி பிரஷாந்தன், திருமதி யசோதினி லக்சுமி வாசன், கனகரத்தினம் சிவசுதன், திருமதி வரலட்சுமி பத்மநாதன், செல்வராசா சதீசன், திருமதி மாதங்கி மதியழ கன், சச்சிதானந்தம் சந்திரகுமார், சுப்பிரமணியம் ஞானேஸ்வரன், சந்திரலிங்கம் அருட்சுனன், அகிலா பொன்குமார், கணேஸ்வரன் பார்த்தீபன், சின்னராசா ரஜீ பன், பாலசுப்பிரமணியம் மயூரன், திருமதி சுபாஜி ஞான குமார், சிவஞானசேகரம் அம்பிகாவதி, திருமதி அல்போ ன்சா றெஜினோல்ட் சேவியர், இரத்தினசிங்கம் நவரூபன், தம்பிராசா அகிலேந்திரன், சிந்துஜா சமதர்மபாலன், வராகி வழிவேல், சத்தியானந்தன் தவசீலன், [illegible]லிங்கம் அகிலன், [illegible] மயூரன். (அ)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும்
(யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை)
**வசந்தகுமாரி ஆனந்தநடராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
**கந்தையா - நாகம்மா** அவர்களின்
மறைவின்னால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி
**யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.**
(சி-2733)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




வடமாகாணசபை 2013 ஆம்ஆண்டுக்கான திட்டமிடல் ஒருங்கிணைப்பு கூட்டமும் அவ்வாண்டுக்கான திட்டங்களும் அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகள், வடமாகாண அரசாங்க அதிபர்கள்,அமைச்சின் செயலாளர்கள், பிரதேசசபை செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளிட்டோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :என். குமார்)

# தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் மும்மொழிப் பிரயோகம் கட்டாயம்

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி எனும் தலைப்பில் நடைபெறவுள்ள கண்காட்சியின் போது மும்மொழிகளையும் கட்டாயம் பயன்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

கண்காட்சி பூமியில் அமைக்கப்படும் சகல காட்சி கூடங்கள், பதாதைகள், கட்அவுட்கள், பனர்களில் விசேடமாக அரச கருமமொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் கட்டாயம் பொறிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் நீல் த அல்விஸ் குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டுக்கான தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி எனும் தொனிப் பொருளினாலான கண்காட்சி எதிர்வரும் 23 ஆம் திகதி அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்பவியல்நிறுவனம்மற்றும்அதனை அண்டியுள்ள சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் இடம் பெறவுள்ளது.

இதேவேளைமும்மொழிஅமுலாக்கலை, கண்காட்சியின் போது கட்டாயம் நடைமுறைப்படுத்துமாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு விசேட சுற்று நிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளதாக அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டினார்.

இம்முறை கண்காட்சியில் காட்சிக் கூடங் களை அமைக்கும் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள்,அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங் களுக்கு மும்மொழி அமுலாக்கல் விடயம் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் சுற்று நிருபத்தையும் அனுப்பி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் ஓயாமடு பிரதேசத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஆறாவது தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது மும்மொழி அமுலாக்கல் தொடர்பில் காணப்பட்ட சிலகுறைபாடுகளை அடுத்து அதனை நிவர்த்தி செய்யும் வகையிலேயே விசேட சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

கொழும்பிலுள்ள அமைச்சுக்கள், திணைக் களங்களிலிருந்துவருகை தருபவர்களிடையே மும்மொழிகளில் விபரிக்கக் கூடியவர்கள் இல்லாத பட்சத்தில் அவர்கள் தங்களிடம் கோரிக்கை விடுத்தால்பட்டதாரிகளைவழங்கக்கூடிய நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டினார். சிங்களம்,தமிழ், முஸ்லிம் என்ற அடிப்படையில் மூவின மக்களும் ஐக்கியத்துடன் வாழும் அம்பாறை மாவட்டத்தில் விசேடமாக மும்மொழி அமுலாக்கல் முக்கியம் என்றும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கைப் பணிப்பெண்ணுக்கு ஊசி ஏற்றிக் கொடூரம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிற்கு பணிப் பெண்ணாகச் சென்று ஊசி ஏற்றப்பட்ட துன்புறுத்தலுக்கு இலக்கான பெண் ஒருவர் இலங்கை வந்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மகவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த ஜனவரி மாதம் சவுதி அரேபியாவில் இந்த கொடுமைகளை அனுபவித்துள்ள நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

குறித்த பெண் பணியாற்றிய வீட்டின் உரிமையாளர் அப்பெண்ணின் இரு கைகள் மற்றும் கால்களில் ஊசி போன்ற கம்பிகளை ஏற்றி துன்புறுத்தியுள்ளார்.

பின்னதாக அவரே வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்துள்ளார். அங்கு வைத்து அவ் ஊசிகள் அகற்றப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பெண் கடந்த 13 ஆம் திகதி திடீரென இலங்கை வந்துள்ளார். மகவ பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதான இவர் குருநாகல் பிரதேசத்திலுள்ள வெளிநாட்டுவேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் சவுதி அரேபியாவிற்கு சென்றுள்ளார்.

இந்நிறுவனத்திடமிருந்து நஷ்டஈட்டை பெற்றுக்கொடுப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

பணிப் பெண்களாக வெளி நாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்லும் பெண்கள் பலர் கடந்த காலங்களில்துன்புறுத்தல்களுக்குஉள்ளான நிலையில் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமைச்சர் நியோமல் உரோமுக்கு விஜயம்

இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா உரோமிற்கு விஜயம் செய்துள்ளணர்.

இராஜதந்திர நோக்கம் கருதியே இவரது விஜயம் அமையப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் உரோம் தூதரகத்தில் சில சந்திப்புக்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரோம் வாழ் இலங்கையர்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் மற்றும் தூதரகத்தில் நிலவி வரும் பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை நடத்துவது பொருத்தமானதல்ல

## கொழும்பு டெலிகிராப் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் தற்பாதுகாப்பு எண்ணம் பொதுநலவாய நாடுகளை காயப்படுத்தி இருப்பதாக த கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதன் இணையத்தளத்தில்நேற்று முன்தினம் வெளியிப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நாடு என்ற அடிப் படையில் இந்தக் குற்றச்சாட்டு தீர்க்கப்படும் வரையில் பொதுநலவாய நாடுகளின் இலங்கை மாநாட்டை இலங்கை நடத்தாதிருக்க வேண்டும். எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவ்வாறு செய்யவில்லை.

இந்த வருடம் எவ்வாறாயினும் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தி அடுத்த இரண்டு வருடங்களுக்கு அதன் தலைமைப் பொறுப்பை வகிப்பதில் ஜனாதிபதி குறியாக இருக்கிறார்.

இந்த சுயநலத்தினால் தற்போது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளுக்கு என்று ஒரு அந்தஸ்து இருக்கிறது. இலங்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை பலவந்தமாக பதவி நீக்கி இருந்தார்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றங்களை நீக்க சர்வதேச விசாரணைகளுக்கும் அவர் இடம் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் இலங்கையில் இந்த மாநாட்டை நடத்துவது ஏற்புடையது இல்லை என்று த கொழும்பு டெலிகிராப் தெரிவித்துள்ளது. (அ-2)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் (கே.சி.சி.சி.) நடத்தப்படும் துடுப்பாட்டசுற்றுப்போட்டி எதிர்வரும் 29திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்கு பெறவிருக்கும் அணிகளுக்கான தெரிவு 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ள நிலையில் இத்துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகள் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு குறித்த விளையாட்டு கழக செயலாளர் நா. [illegible] அறிவித்துள்ளார். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## பணிந்த உள்ளத்தினராய் வாழ்வோம்



இயேசுவை காணாததால் அவரைத் தேடிக் கொண்டு பெற்றோர் எருசலேமிற்குத் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். பின்பு அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்கு பணிந்து நடந்தார் எனும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகின்றது.

பணிவு, தாழ்ச்சி, கீழ்ப்படிதல் போன்றவற்றிற்கு இலக்கணத்தை குழந்தை இயேசுவும் தனது பெற்றோரிடமிருந்து கற்றுக் கொண்டார் என்று நாம் இன்று கூறலாம். எனவேதான் இந்தப் பணிவு இறுதி வரையில் அதுவும் சிலுச்சாவை ஏற்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தி கீழ்ப்படிந்து முன்மாதிரி காட்டினார். பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்திருக்க கீழ்ப்படிய வேண்டும் என்னும் கட்டளை இன்று பெற்றோர் சிலர் பார்க்கின்ற விதமே தனியானது. இதனை மேற்கோள்காட்டி அவர் ள் குழந்தைகளை அடிமைகளைப் போல நடத்துகின்ற போக்கு எம்மிடைய ஆங்காங் கே உள்ளன.

இதனை வன்மையாக கண்டிக்கலாம். ஏனென்றால் மனிதர் பெரியவரானாலும் சிறியவரானாலும் அவர்களுக்கும் உரிமைகள் கடவு ளே வழங்குகின்ற மனித மாண்பு உண்டு. அதை யாரும் அழித்து விடவோ, எடுத்து விடவோ இயலாது. சிறுவர்களும் மனிதர் களே. அவர்களுக்கும் உரிமைகள் உண்டு. அவற்றை யாரும் மீறலாகாது. பிள்ளைக ளை தங்களுக்கு பணிந்திருக்க வேண்டும் என்ற வெறியோடு பிள்ளைகளை நடத்தி மனம் மகிழும் பெற்றோரை நாம் பார்க்கின்றோம். சாதியத்தில் ஊன்றிப்போன பெற்றோரின் கௌரவத்தால் தங்கள் பிள்ளைகளின் வாழ்வை சீர்குலைத்து தங்களை பிள்ளைகள் எரிந்து தற்கொலை செய்யும் அளவிற்கு நடக்கும் பெற்றோரையும் நாம் பார்க்கின்றோம்.

அதனை தங்கள் பிள்ளைகள் தங்களுக்கு பணிந்திருக்கிறார்கள் என பிறரிடம் புகழ்வோரையும் நாம் காண்கின்றோம். பிள்ளைகள் தங்களுக்கு பணிந்திருக்க வேண்டும் என்ற எண்ணக் கருவை இவ்வாறு பாழாக்கும் பெற்றோரும் எம்மிடையே உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது. உள்ளார்ந்த பணிதலும் கீழ்ப்படிதலும் மனிதர் யாராயிருந்தாலும் இன்றியமையாதது.


நாமும் இந்தப் பணிவை கற்றுக்கொள்வோம். பணிந்த உள்ளத்தினராய் வாழ்வோம். இயேசு தம் விண்ணகத் தந்தைக்குப் பணிந்து வாழ்ந்தார். பிள்ளைகள் பணிவு கீழ்ப்படிவு என்னும் பண்பை பெற்றுக்கொள்ள பெற்றோராகிய நாம் எம்வாழ்வால் அவர்களுக்கு முன்மாதிரி காட்டுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏழை அளித்த பொன்னாடை



குர்ஜார் நாட்டு ஆஸ்தான குரு ஒரு சமயம் தலைநகரத்திற்குத் திரும்பும்போது வழியில் ஒரு கிராமத்தில் ஓரிரவு ஓர் ஏழைக் கிழவியின் வீட்டில் தங்க நேர்ந்தது.

அவள் ஏழையாக இருந்த போதிலும் அவளுடைய அன்பான உபசரிப்பில் குரு மனம் நெகிழ்ந்து போனார். அவள் முகத்தில் கருணை பொங்கி வழிந்தது. அவள் குடிசையின் ஒவ்வொரு மூலையும் அன்பின் சின்னமாகத் திகழ்ந்தது. அவளுடைய அன்பில் மூழ்கிய குரு தன்னை அவளுடைய சொந்த சகோதரன் போல் உணர்ந்தார்.

மறுநாள் குரு அவளிடம் விடை பெறுகையில் அந்தக் கிழவி தன் கையினால் நெய்த ஒரு சால்வையை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள். குரு அதைத் தன் மீது போர்த்திக் கொண்டு தலைநகருக்குத் திரும்பியவர் அதே சால்வையை அணிந்து கொண்டு சபைக்குச் சென்றார்.


தனது சுற்றுப்பயணம் முடிந்து தலைநகர் திரும்பிய குருவை மன்னரும் ராணியும் ராஜோபசாரம் செய்தனர். பின்பு குரு தன் ஆசனத்தில் அமர்ந்து தன் பயண அனுபவங்களைக் கூறி முடிந்தபின் மன்னர் தயங்கித் தயங்கி அவரிடம் குருவே தாங்கள் போர்த்தியுள்ள சால்வை ஒரு ஆஸ்தான குருவுக்குத் தகுதியானதல்ல! அது ஏதோ ஒரு சாதாரண மலிவான துணியாகத் தோன்றுகிறது என்றார்.

அதற்கு குரு மன்னா! சதையும் எலும்புமான இந்த அழியப் போகும் உடலுக்கு எதைப் போர்த்தினால் என்ன என்றார்.

அப்படியில்லை குரு! ஆனால் நீங்கள் ஆஸ்தான குரு! இது போன்ற கீழ்த்தரமான துணியை அணிவது எனக்கு அவமானமாக உள்ளது என்றான்.

உடனே குரு மன்னா! நீ துணியை மட்டும் பார்க்கிறாய்! ஆனால்! அதைத் தன் கைகளினால் வியர்வை சிந்த இரவும் பகலும் கஷ்டப்பட்டு உழைத்துத் தயாரித்த அன்பு உள்ளங்களை அறியமாட்டாய்!

இந்தத்துணி உனக்கு சாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் பல நாட்கள் சிரமப்பட்டு உழைத்துத் தயாரிக்கும் இந்தத் துணியை தானமாகக் கொடுப்பதற்கு மிக தாராள அணிவதில் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். மன்னா! நீ ராஜபோகத்தில் சுகித்து இருக்கிறாய். ஆனால் உள்நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என்பதை உணர்த்தவே இதை உன் முன்னால் அணிந்து வந்திருக்கிறேன். நீ எனக்கு அளித்துள்ள எத்தனையோ விலை உயர்ந்த சால்வைகளை விட ஓர் ஏழை சகோதரி எனக்



மான மனம் தேவை! ஏழையாய் இருப்பினும் தங்களிடம் உள்ளதை தானம் அளிக்க முன்வரும் அவர்களின் கொடைத் தன்மையைப் புரிந்து கொள்.

நீ சொல்வது போல் இதை நான் அவமானச் சின்னமாகக் கருதவில்லை. மாறாக இதை களித்த இந்தப் பருத்தித் துணியை விலை மதிப்பற்ற பொன்னாடையாகக் கருதுகிறேன். இனியாவது குடிமக்களின் நலம் பேணுவாய்! என்று சொல்ல மன்னன் சிலையாய் உறைந்த போனான்.

# சம்பந்தி மரியாதை

## அம்புலிமாமா கதைகள்

ஜகன்னாதனும் அவர் மனைவியும் தன் ஒரே பெண் ஊர்மிளாவின் கல்யாணத்தைத் தடல்புடலாக நடத்தினர். கல்யாணம் முடிந்த பின் சம்பந்திகளுக்கு மரியாதை செய்து ஏகப்பட்ட பட்சணங்களை சீர் அளித்த பின் அறுசுவை விருந்தும் படைத்தார் ஜெகன்னாதன்.

ஆனால் சம்பந்தி ஊருக்குப் போகும் போது ஊர்மிளாவிடம் சாப்பாடு வாயில் வைக்க வழங்கவில்லை என்று குறை சொல்லிவிட்டுப் போனார்.

அதை மனத்தில் வைத்துக் கொண்ட ஜெகன்னாதன் அடுத்த முறை சம்பந்திகளை இருவரும் தன் வீட்டுக்கு வந்த போது நகரத்தில் பெயர் போன சிறந்த சமையற்காரர்களைக் கொண்டு விருந்து தயாரித்து அளித்தார்.


அப்படியும் சம்பந்தி போகும் போது ஊர்மிளாவிடம் இலையில் பதார்த்தங்களை அளந்து அளந்து வைத்தார்கள் என்றும் வயிறே நிறையவில்லை என்றும் புகார் செய்தனர்.

அடுத்த முறை சம்பந்தி தனி வீட்டுக்கு வந்தபோது அவரை சம்பந்தியிடம் இந்த முறை வேண்டுமென்பதை கூச்சப் படாமல் கேட்டு வாங்கி சாப்பிடுங்கள் என்று உபசரித்த பின் பரிமாறுபவர்களை சம்பந்திகளின் தட்டுகளில் பதார்த்தங்களை வண்டி வண்டியாகக் கொட்டச் சொன்னார்.

இந்த முறை சம்பந்தியால் புகாரே செய்ய முடியாது என்று ஜெகன்னாதன் இறுமாந்திருக்க சம்பந்தி ஊர்மிளாவிடம் வெள்ளித் தட்டு பிறந்த குழந்தையின் கையகலத்திற்கு ப சின்னதாக இருந்தது. சரியாக சாப்பிடவே முடியவில்லை என்று பாராட்டி விட்டுப் போனார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மேட்டார் சைக்கிள்ல கூட்டியாந்து பள்ளிக் கூடத்துல எறக்கிவிட வந்த தகப்பனைப் பாத்து அஜய்தேவும் ரூப்கலாவும் வார்த்தையத் தேச்சுத்

"யப்பா... உங்க குடும்பத்துக்குக் கடன்பட்டவன் வந்திருகனப்பா. உங்க பரம்பரைக்கு என்னால ஒரு கெட்டது நடந்து போச்சு. அது நான் எண்ணிச் செஞ்ச காரியமில்ல மகனே... என்னமோ அது ஒரு காலக்கூத்து. செயிலவிட்டு ஏழே வருசத்துல வெளிய வந்துட்டேன். ஆனா மனச் சாட்சியவிட்டு இன்னைக்கு வரைக்கும் வெளிய வரமுடியல. என்னைக்காவது உன் குடும்பத்துக்குப் பட்ட கடனைத் தீத்திருவேன். ஆனா உங்க பரம்பரைக்குச் செஞ்ச பாவத்த என்னைக்குத் தீக்கப்போறேன்?"

கண்ணுல லேசாத் தண்ணி ஊறித் தொண்டை கட்டிப்போயிக் குரல் உடையுது கருத்தமாயிக்கு.

ஆனா கருத்தமாயி நெனைக்கல கவட்டைக்காலன் மகன் முருகராசு சாமி குறி சொல்ற மாதிரி அம்புட்டு

"என்ன பெரியப்பா... பத்திரத்து மேல கடன் கேக்குறீகளே... பத்திரம் இல்லையே"

"பத்திரம் இல்லையா? என்னப்பா சொல்ற?"

"நேத்துத்தான உங்க மகன் கடனக் கட்டிப் பத்திரத்த வாங்கிட்டுப் போனான்"

"என் மகனா? சின்னப்பாண்டியா?"

"இல்ல. முத்துமணி"

இடி வந்து விழுந்திருச்சு கருத்தமாயி தலையில.

"யாத்தே... இத்தன வருசமாப் பாம்பு வாயில கிடந்த பத்திரம் இப்ப முதலை வாய்க்குப் போயிருச்சே..."

கதி கலங்கிக் கண்ணு இருண்டு உலகமே மங்கி மறையுது கருத்தமாயிக்கு.

☆☆☆☆☆☆

தீப்பிடிச்ச மாதிரி சேதி பரவுது

பாவம். ரெண்டு தலைமுறையாக் கழியாத கடன்; ஒரு தலைமுறையாப் பேச்சுவார்த்தை இல்லாத பொண்டாட்டி; பாலூத்தி வளத்துப் பாம்பாகிப்போன மூத்த மகன்; ஊரைத் தூக்கி நிறுத்திட்டு வீட்டுக்கு இன்னும் வெறும்பயலா நிக்கிற இளைய மகன்; கஞ்சிக்கு விளையாத பூமி; கண்ணு தொறக்காத சாமி"

"என்னமோ கருத்தமாயி காட்டுல மட்டும்தான் மழைபெய்யாத மாதிரி பேசுறீங்க? எல்லார் பொழப்பும் அப்படித்தான கெடக்கு. வீட்டுக்கு வீடு வாசப்படி. எந்தப்பிள்ளைக தாய் தகப்பனோட ' ஒத்துப் பொழைக்குதுக?இடுப்புக்கு மேல வளந்ததும் கழுத்த எட்டிக் கடிக்குதுக. அழகு சங்கு மகன் தகப்பனைக் கிணத்துல தள்ளிக் கொன்டுப்புட்டானா இல்லியா?"

"ஆமா... அழகுசங்கு நல்லவனாக்கும்? சாகிற வரைக்கும் சொத்து இல்லடான்னு சொல்லிப்புட்டான்; மகன் கொன்னுபுட்டான். இடுப்பு வேட்டி மாதிரியே சொத்தையும் இறுக்கிப் புடிச்சுக்கிட்டிருந்தா கதைக்கு ஆகுமா? ஆண்டமா அனுபவிச்சமான்னு கொடுத்துறணுமா இல்லையா?"

"கொடுக்கறதுக்குத் தகப்பனுக்கு மனசு வரலாம். அதவாங்கிச் செலுத்த மகனுக்கு யோக்கியதை வேணுமா இல்லையா? பட்டுக் குஞ்சத்தக் கொன்டுபோயி விளக்கமாத்துல கட்டுனா விளங்குமா?"

"நீ விளக்கமாறை ஏன் பெத்த? வேல்கம்பைப் பெத்திருக்கணும்"

"வேல்கம்பாப் பெறந்தது விளக்கமாறாப் போயிருதே"

"யாரு தப்பு? வேல் கம்பு விளக்குமாறாப் போறவரைக்கும் பாத்துக்கிட்டிருந்தியே யாரு தப்பு? காளையோ மோழையோ பெத்ததுக கையில சொத்தைக் கொடுத்துட்டுக் கெழடு கட்டைக ஒதுங்க வேண்டியதுதான"

"அப்ப முத்துமணி கையில நிலத்தக் கொடுத்துட்டு வயித்துல ஈரத் துணிய இறுக்கிக் கட்டிக் கருத்தமாயப் படுக்கச் சொல்றியா?"

"ஏன் நிலம் கொடுத்த அப்பன் ஆத்தாளுக்குக் காலமெல்லாம் கஞ்சி ஊத்த மாட்டானா· முத்துமணி"

"ஊத்துவான் ஊத்துவான். சாகப் போற வாய்க்குப் பாலூத்தக்கூடக் கணக்குப் பாக்கிற சண்டாளப்பய அப்பன் ஆத்தா பொழச்சுக் கெடக்கக் கஞ்சி ஊத்துவானாக்கும்? அது தெரிஞ்சுதான புடிச்ச புடி விடாம நிக்கிறாரு கருத்தமாயி. கத சொல்லுவாகல்ல ஊருல... கடலுக்குள்ள தீவு இருக்கு; தீவுக்குள்ள மலை இருக்கு; மலைக்குள்ள குகை இருக்கு; குகைக்குள்ள பூவு இருக்கு; பூவுக்குள்ள வண்டு இருக்கு; வண்டுக்குள்ள புழு இருக்கு; பூழுவப் புடிச்சு நசுக்குனா ராசா செத்துப்போயிருவாருன்னு... அப்படித்தானப்பா கருத்தமாயி கதையும். நிலத்தப் புடுங்கிட்டா அவரு ஆத்துமா அடங்கிரும். அதுக்குத்தான் அடிபோடுது அந்த லஞ்சத்துல பெறந்த நாயி"

"அப்பனையே பஞ்சாயத்துக்கு இழுத்துட்டானே... பஞ்சாயத்துல என்ன கூத்தாகப்போகுதோ கொடுமை நடக்கப்போகுதோ?"

வீட்டுக்குள்ள- திண்ணையில- தெருவுல- வயக்காட்டுல- களத்து மேட்டுல- சாராயக்கடையில- டீக்கடையில- தாயம் உருட்டுற இடத்துல- ஆத்தாங்கரையில- குளத்தாங்கரையில இதே பேச்சாயிருக்கு எங்க பாத்தாலும்.

(தொடரும்)

# மூன்றாம் உலகப்போர்

**76**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

தேச்சுப் பேசுறாக: "டாடி! எங்க பள்ளிக்கூடத்துக்கு இனி வர வேணாம். எங்க டீச்சரெல்லாம் எங்கள ஒரு மாதிரி பாக்குறாங்க"

பிள்ளைக சொன்ன அந்த வார்த்தையிலதான் முத்துமணிக்குள்ள இருந்த அத்தனை மிருகமும் மொத்தமா எந்திரிச்சுக் காச்மூச்- ன்னு கத்திக் குமிச்சுருச்சுக.

பட்டினி கிடந்த நாய்க்கு வெறி புடிக்குமாமில்ல; புடிச்சுருச்சு முத்துமணிக்கு.

☆☆☆☆☆☆

கால் நடுங்குது கருத்தமாயிக்கு. உடம்பு முன்னப் போனாலும் நெஞ்சப் புடிச்சு யாரோ பின்னுக்குத் தள்ளூற மாதிரி தெரியுது. முப்பத்தேழு வருசம் கழிச்சு அந்த வீட்டுப்படி மிதிக்கணுமா? எனக்கு அந்த யோக்கியதை இருக்கா? சரி... வேற வழியில்ல. கடன் கேப்போம்; இல்லேன்னு சொல்லிட்டா பழைய தப்புக்கு மன்னிப்புக் கேட்டுட்டுத் திரும்பிருவோம்.

நெஞ்சை இறுக்கிப் புடிச்சுக்கிட்டுத் துணிஞ்சு ஏறிட்டாரு கவட்டக்காலன் வீட்டுக்குள்ள. உள்வாசல்ல மேஞ்சுக்கிட்டிருந்த கோழிக எல்லாம் இவரைக் கண்டதும் ஓடி ஒளியுதுக. பசுமாடும் வெள்ளாடும் வெறிச்சு வெறிச்சு இவரைப் பாக்குதுக. சக்கர நாற்காலியில, உக்காந்திருக்கான் கவட்டக்காலன் மகன். அவனுக்குக் காப்பி ஆத்திக் கொடுத்துக்கிட்டிக்கான் ஒரு பொடிப்பய. ரெண்டு காலும் விளங்காமலே பெறந்தவன் அவன். தாய்மடி பொண்டாட்டி மடி எல்லாமே அவனுக்குச் சக்கர

அழகாப் பேசுவான்னு.

"நீங்க முப்பத்தேழு வருசமா மறக்காம இருக்கீக. ஆனா எங்க குடும்பம் அத மூணே மாசத்துல மறந்திருச்சு பெரியப்பா. பெறப்பை ஒரு வழியில வச்சுட்டு, சாவைப் பல

ஊருக்குள்ள. தெருத் தெருவா சாட்டிக்கிட்டே போறான் தோட்டி மாதப்பன்.

"அய்யா... இதனால சகலமான வகளுக்கும் தெரிவிக்கிறது என்ன



வழிகள்ல வச்சிருக்கு கடவுளு. எங்கப்பனை நீங்க கொல்லல; உங்க வழியா அவுருக்குச் சாவு வந்திருக்கு. அத மறந்துருங்க. உக்காந்து டீ குடிங்க. வந்த காரியம் சொல்லுங்க"

"உங்க கடனைக் கட்டவும் எங்க குடும்பத்த நிமித்தவும் இப்ப ஒரு காலம் கைகூடி வந்திருக்கு முருகராசு. பழைய பத்திரத்துமேல ஒரு லச்சரூவா எச்சாக் கொடுத்தீங்கன்னா என் சின்னப்பயல அமெரிக்காவு ஒரு

ன்னா... அட்டணம்பட்டி சீனிச்சாமி மகன் கருத்தமாயிக்கும் கருத்தமாயி மகன் முத்துமணிக்கும் சொத்துத்தகராறுல ஒரு பஞ்சாயத்து இருக்கிறபடியால எட்டுப் பட்டரை சாதிசனமும் வாற புதன்கெழமை காலையில பத்துமணிக்கு அரசமரத்தடி அம்பலக் கல்லுல வந்து கூடணுமுன்னு ஊர்ப் பஞ்சாயத்து உத்தரவு! ஊர்ப்பஞ்சாயத்து உத்தரவு!"

"கிணிமிட்டி கிணிமிட்டி

## "அப்பனையே பஞ்சாயத்துக்கு இழுத்துட்டானே..."

நாற்காலிதான். கருத்தமாயி கவட்டைக்காலனை வெட்டியெறிஞ்சப்ப ஆறேழு வயசு அவன் மகனுக்கு. இப்ப நாற்காலி கொள்ளாம உடம்பு பெருத்துப்போயி தாடிமீசையோட ஒரு பக்கமாச் சாஞ்சு ஒரு மார்க்கமா உக்காந்திருக்கான். அவனக் கையெடுத்துக் கும்புட்டாரு கருத்தமாயி.

படிப்புப் படிக்க வச்சு ஆளாக்கி அழகு பாத்திருவேன். இல்லேன்னு சொல்லிராத மகனே. ஏறாத படி ஏறிவந்து கேட்டிருக்கேன்"

முருகராசு ஒண்ணும்பேசல.

தலைய அங்கிட்டும இங்கிட்டும் ஆட்டி உதடு பிதுங்கி உச்சு மட்டும் கொட்டிக்கிட்டான்.

கிணிமிட்டி கிணிமிட்டி"

தமுக்கு அடிச்ச சத்தம் தேஞ்ச இடத்துல இருந்து ஊராளுக பேச்சு ஆரம்பிச்சிருச்சு.


"எல்லாருக்கும் எதிரி வெளிய இருந்து. வாறதில்லப்பா; வீட்டுக் குள்ளயிருந்துதான்"

"பாவம் கருத்தமாயி... இந்த மனுசன் எத்தனையச் சமாளிப்பாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றுவலி குறிக்கும் அறிகுறிகள்

உண்ணும் உணவு அளவுக்கு அதிகமான சுவையுடன் இருந்தாலும் சரி, அதிக பசியுடன் இருந்தாலும் சரி, அப்போது உண்ணும் உணவின் அளவே தெரியாது. அவ்வாறு அளவுக்கு அதிகமாக சாப்பிட்ட பின் உடல் அதிக சோர்வுடன் அல்லது எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருப்போம். இது எப்போதும் நடக்கும் செயல்தான். ஆனால் நம் வயிற்றின் அளவை மீறி




சாப்பிடும் போது அந்த உணவு சமிபாடடைய நிறைய நேரம் எடுத்துக் கொள்கிறது. மேலும் உடலில் உள்ள அனைத்து சக்திகளும் அந்த உணவு பொருட்களை சமிபாடடையச் செய்யும் வேலையில் ஈடுபடும். ஆகவே தான் உடலில் அதிக சோர்வும் தூக்கமும் வருகிறது.

ஆனால் சிலருக்கு உணவருந்திய பின் கடுமையான வயிற்றுவலி ஏற்படும். அதிலும் அடிவயிற்றில் வலி ஏற்பட்டு உட்காரவே முடியாத நிலையில் இருக்கும். அவ்வாறு அடி வயிற்றில் அதிக வலி ஏற்பட்டால் அதற்கு வாயு, சமிபாடின்மை என நிறைய காரணங்கள் உள்ளது. வயிறு வலிக்கும் போது வலது புறத்தில் வலி ஏற்பட்டால் சிறுநீரகத்தில் கல், அப்பெண்டிக்ஸ் அல்லது குடல் அரிப்பு (அல்சர்) போன்றவற்றில் ஏதேனும் ஒன்று இருக்கிறது என கொள்ளமுடியும்.


அதுவே இடதுபுறத்தில் வலி ஏற்பட்டால், குடலில் புண் (அதிக வலி இருந்தால் குடல் புற்றுநோய்) குழாய்களில் ஏதேனும் சதை வளர்ச்சி, வயிற்றுப் போக்கு அல்லது மலச்சிக்கல் என்பதற்கான அறிகுறிகளாகும்.

உடலில் குடலியக்கம் சரியாக இயங்கவில்லைஎன்றால்உண்ட பின்பு வயிற்றில் வலி ஏற்படும். எப்போது குடலியக்கம் சரியாக இயங்கவில்லையோ, அப்போது பெருங்குடலில் பெரும் வலியை உண்டாக்கும். எப்போது உடலில் வாயு அதிகமாக உள்ளதோ அப்போது வயிற்றில் ஒருவித வீக்கம் ஏற்படுவது போல் இருக்கும். எரிச்சல் வரும். வயிற்றில் புண் இருப்பது தான் இதற்கு காரணம். இதனால் வயிற்றில் வலி,வாந்தி, மற்றும் வயிற்று போக்கு ஏற்படுகிறது.

### மலச்சிக்கல்:

மலச்சிக்கலும் வயிற்றுவலியை உண்டாக்கும். அதிலும் எப்போது குடலின் இயக்கம் சரியாக இயங்காமல், மிகவும் வலுவுற்று இருக்கிறதோ, அப்போது அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்படும். அந்த நேரத்தில் உடலில் இருக்கும் கழிவுகள் வெளியேறாமல் தங்கி விடுகிறது.

உணவு சாப்பிட்ட பின் வயிற்று வலி ஏற்பட்டால் அதற்கு குடல் அரிப்பே முக்கிய காரணமாக இருக்கும்.குடல் அரிப்பும் ஒரு வகை புண் தான். வயிறு, குடல் அல்லது முன் சிறுகுடல் போன்றவற்றில்தான் குடல் அரிப்பு இருக்கும்.வயிற்றில்உள்ள அமிலம் மற்றும் உணவு பொருட்கள் குடல் அரிப்பு உள்ள பகுதியில் படும் போது வலி ஏற்படும்.




### வலியை தடுப்பது எப்படி?

ஒரே நேரத்தில் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதை விட சிறுசிறு இடைவெளி விட்டு உணவு சாப்பிட்டு வந்தால் வலி ஏற்படுவதை தவிர்க்கலாம். உண்ணும் உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும். இப்படி சாப்பிடும் போது செரிமானம் விரைவில் நடைபெற்று உடல் எடையும் குறையும். வேகமாகப் சாப்பிட்டால் உடலில் உள்ள செயற்பாடு அனைத்தும் பாதிக்கப்பட்டு வலியை ஏற்படுத்தும்.

எனவே சரியான அளவில் சாப்பிட்டு அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும். அதன் பின்னரும் வலி ஏற்பட்டால் மருத்துவரை அணுகவேண்டும்.

எவ்வாறாயினும் எமது உடல் இயக்கத்தில் வெவ்வேறு மாற்றங்கள் ஏற்படலாம். ஓர் நோய்க்கான அறிகுறி சிலவேளைகளில் சிறு உடல் மாற்றம், காலநிலை மாற்றங்களில்கூட வெளிக்காட்டப்படலாம். எனவே ஓர் அறிகுறியை கண்டு எமக்கு குறித்த நோய் இருப்பதாக எண்ணிப் பயப்படுவதைவிட உடனடியாக வைத்திய ஆலோசனைகளை நேரடியாக பெறுவது எமக்கு நன்மை பயக்கும்.

Health Care
## மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் இன்று தாக்கல் செய்யப்படலாம்

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக திருத்தப்பட்ட இறுதி தீர்மானத்தை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படலாம் என தெரிகிறது. அமெரிக்கா கொண்டு வந்துள்ள இத்தீர்மானம் தற்போது நான்காவது முறையாக திருத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனீவாவில் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் நடந்து வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவரவுள்ளது.

முன்னதாக இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை 38 பக்கங்கள் கொண்ட அறிக்கைகளை கடந்த மாதம் சமர்ப்பித்தார்.

அதில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிப்பதாக அளித்த வாக்குறுதியை இலங்கை அரசு மீறி விட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இலங்கை அரசின் எல்.எல்.ஆர்.சி. எனப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும் என தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

அநேகமாக இன்று செவ்வாய்க்கிழமை வரை, தீர்மானத்தில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ள அமெரிக்காவுக்கு வாய்ப்பு உள்ளது. நாளை அல்லது நாளை மறுதினம் வியாழக்கிழமையோ தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே இந்தியாவின் நிலைப்பாடு குறித்து வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறுகையில், இலங்கைக்கு எதிராக தீர்மானம் தொடர்பாக இன்னும் இந்தியா முடிவு எடுக்கவில்லை. தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க.விடம் பேசப்படும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பிற்கு கால அவகாசம் உள்ளது.

இது தொடர்பாக கருணாநிதி கூறியது தனக்கு தெரியாது என்றார். (அ-2)

# சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் நேற்று திறப்பு

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை பருதகந்த சூரியசக்தி பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையமே நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் ஜப்பான் அரசாங்கத்தின் பத்து மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் திட்டத்தின் கீழ் இந்த சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக தேசிய மின் உற்பத்தி வலையமைப்பிற்கு 737 கிலோ வாட் சூரிய சக்தி மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதியமைச்சர் அப்துல் காதர் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ ஹொபோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# கருணாநிதியை சமாதானப்படுத்த மத்திய அமைச்சர்கள் சென்னைக்கு

ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து விலகப் போவதாக திராவிட முன்னேற்றக் கழகம் மிரட்டல் விடுத்துள்ளது. இந்நிலையில் மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஏ.கே. அந்தோனி ,குலாம் நபி ஆசாத் உள்ளிட்டோர் அக்கட்சியின் தலைவர் கருணாநிதியை சமாதானப்படுத்துவதற்காக சென்னைக்கு வருகைதரவுள்ளனர்.

இதன்போது இலங்கைத் தமிழர் நலன் விவகாரத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடம் இல்லை என்பதை கருணாநிதியிடம் அமைச்சர்கள் தெரிவிப்பார்கள் எனத் தெரிகிறது.

தி.மு.க தலைமையுடன் மிகவும் நெருக்கமானமானவர்கள் என்ற காரணத்துக்காக ப.சிதம்பரம் மற்றும் ஏ.கே அந்தோனியையும் தமிழக பொறுப்பாளர் என்ற முறையில் குலாம் நபி ஆசாத்தையும் காங்கிரஸ் மேலிடம் தூதுவர்களாக அனுப்பவுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமை குழு கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தில் போர்க்குற்றம் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவை என திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. வலியுறுத்தி உள்ளது.

இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்காவிடில் கூட்டணியிலிருந்து விலகப் போவதாக அக்கட்சியின் தலைவர் கருணாநிதி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மக்களை வாழ வைத்துவிட்டு தீர்வு திட்டம் பற்றி யோசிக்கலாம்

*மீள்குடியேற்ற அமைச்சர் கூறுகிறார்*

மக்களை வாழ வைப்போம். அதன் பின்னர் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து சிந்திப்போம் என மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாழ முடியாத சூழ்நிலையில் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து பேசுவதில் அர்த்தமில்லை. மக்களை மீள்குடியேற்றி அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தியதன் பின்னர் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து கவனம் செலுத்த முடியும்.

இந்தப் பிரதேச எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பார்கள் என்று நாம் கேட்கவில்லை. அது எங்களுக்குத் தேவையும் இல்லை. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றார். (அ-2)

# எனது கோரிக்கைக்கு பதில் இல்லை-ரணில்

(கொழும்பு)

சர்வதேச சவால்களை சமாளிக்க தாம் வைத்த கோரிக்கைக்கு அரசாங்கம் இதுவரையில் எந்த பதிலையும் வழங்கவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச சவால்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சர்வகட்சி கூட்டம் ஒன்றை நடத்த ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது. இதற்கு அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி தீவுப்பிட்டி கிராம மக்கள்

(கொழும்பு)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தீவுப்பிட்டி கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீவுப்பிட்டி கிராமத்தில் வாழ்ந்து வரும் 40 குடும்பங்களும் யாழ்ப்பாணம் உட்பட பல பாகங்களில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் கடந்த 16 வருடங்களாக குறித்த கிராமத்தில் வாழ்ந்து வருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் அதிகமானோர் தற்போது உள்ள வீடுகள் மற்றும் காணிகளின் உரிமையாளர்கள் இந்தியாவில் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது 40 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் மின்சார வசதி இல்லை. குடிநீர் பிரச்சினை காணப்படுவதாக அக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். இதே வேளை, குறித்த கிராமத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி போராளிகள் பலர் உள்ள போதும் அவர்களுக்கு சுயதொழில் செய்வதற்கு எவ்வித உதவிகளும் இதுவரை நானாட்டான் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த மக்களுடைய பதிவுகள் அனைத்தும் தற்போது நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கடந்த 16 வருடங்களாக வாழ்ந்து வரும் எமக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் வழங்கப்படவில்லை என நானாட்டன் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட தீவுப்பிட்டி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலாளர் அக்ஸ்ரஸ் சந்திரையாவை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த தீவுப்பிட்டி கிராமத்தில் குடியேறியுள்ள மக்களின் குடியேற்றம் நிரந்தர குடியேற்றம் இல்லை. இவர்களை மீண்டும் அவர்களுடைய சொந்த கிராமங்களுக்குச் சென்று மீள்குடியேறுமாறு நாங்கள் அறிவித்தல் வழங்கி விட்டோம். தற்போது இவர்கள் குடியமர்ந்துள்ள வீடுகள் மற்றும் காணிகளின் உரிமையாளர்கள் கடந்த யுத்த காலத்தின்போது இடம்பெயர்ந்து இந்தியா சென்றுள்ளனர்.

அவர்களுடைய வீடு மற்றும் காணிகளை பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது. ஒரு சிலர் மாத்திரமே சொந்தக் காணியுடன் உள்ளனர். இவர்கள் தமது சுய விருப்பத்தின்பேரில் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்படவில்லை என தெரிவித்த பிரதேச செயலாளர் இலங்கை நாட்டில் யாரும் எங்கும் சென்று குடியேற முடியும் என தெரிவித்தார். (அ-2)

## தமிழீழம் மலரும்

### காசி ஆனந்தன்

தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்கள் கொடூரமாக அழித்துக் கொண்டிருந்த காரணத்தினாலேயே புலிகள் உருவாகினார்கள். இதுதான் உண்மையான வரலாறு. இவ்வாறு இந்திய தொலைக்காட்சி வழங்கும் அக்னிப் பரீட்சை என்னும் நிகழ்ச்சியில் காசி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

எனவே, போராளிகள் போற்றப்படக் கூடியவர்களே அன்றி குற்றம் சுமத்தப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்கள் விடுதலையாளர்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் விடுதலையாளர்கள் என கிலாரி கிளின்டன் ஒரு தடவை அமெரிக்காவில் உரையாற்றும்போதே வெளிப்படையாக கூறியிருந்தார்.

அத்தோடு ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தினால் பெரிதாக எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இந்தியா உறுதுணையாக இருந்தாலும் இல்லாவிடினும் தமிழீழம் மலரும் என உறுதியாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## பொதுபல சேனாவின் கிளைகள் நாடளாவிய ரீதியில் நிறுவப்படும்

தமது அமைப்பின் கிளைகளை தங்கள் நாடுகளிலும் திறக்குமாறு பௌத்த நாடுகள் தங்களிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக பொதுபலசேனா அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பு சிங்கள பௌத்தவர்களை பாதுகாப்பதற்காக தொடர்ந்தும் செயற்படும். தற்போது தங்கள் அமைப்பை பெரும்பாலானோர் பின்பற்றுகின்றனர்.

எனினும் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்காக் சில அரசியல்வாதிகளை போல தாங்கள் அரிசி பொதிகளையும் மதுபானத்தையும் வழங்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தாங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்பு இல்லை என்றும் முஸ்லிம் மக்களை உடல் ரீதியாக எந்த தாக்குதலுக்கும் உட்படுத்தவில்லை என்றும் பொதுபல சேனாவின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார். (அ-2)

## தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும்வரை தமிழ்நாட்டில் போராட்டம் தொடரும்

### சமத்துவ மக்கள் கட்சி அறிக்கை

ஈழத் தமிழர்கள் மகிழ்வாக, நிம்மதியாக வாழ தமிழீழம் தான் தீர்வு. அது நிலை நாட்டப்படும் வரை மத்திய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை சமத்துவ மக்கள் கட்சி தொடர்ந்து நடத்தும் என அக்கட்சியின் நிறுவன தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

அக் கட்சியின் நிறுவன தலைவர் ஆர்.சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கை பிரச்சினையில் மாணவ சமுதாயம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பதாகவும் இலங்கையில் இனியும் ஒரு தமிழனைக் கூட நாம் இழந்துவிடக் கூடாது என்கிற அக்கறையை வெளிப்படுத்தியிருப்பதையும் நான் மனதார பாராட்டி வரவேற்கிறேன்.

மாணவர்கள் போராட்டம் நடத்துவது மட்டுமன்றி தமிழக மக்களிடையே ஈழ ஆதரவு பிரசாரம் செய்து ராஜபக்ஷவுக்கு எதிரான விழிப்புணர்வை நம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை அரசின் இனப் படுகொலையை விட மத்திய அரசின் மௌனமும் மெத்தனப் போக்கும் இன்னும் பல மடங்கு எரிச்சலையும் வேதனையையும் ஏற்படுத்தி வருகிறது.

பாராளுமன்றத்தில் பிரதமர் தனது கவலையை வெளிப்படுத்துகிறாரே தவிர மத்திய அரசின் தீர்க்கமான முடிவை இதுவரை தெரிவிக்கவில்லை.

தமிழின படுகொலை புரிந்த இலங்கை அரசு குற்றவாளி என்பதும் இனியும் ஈழத் தமிழர்கள் மகிழ்வாக, நிம்மதியாக வாழ தமிழ் ஈழம் தான் தீர்வு என்பதும் நிலை நாட்டப்படும் வரை மத்திய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை சமத்துவ மக்கள் கட்சி தொடர்ந்து நடத்தும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (அ-2)

## நாகதம்பிரான் பொங்கல் 26 இல்

(பூந்தோட்டம்)

வரலாற்று சிறப்பு மிக்க புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் இரவாக நடைபெற வுள்ளது. விளக்கு வைத்தல் நிகழ்வுடன் இன்று ஆரம்பிக்கும் பொங்கல் விழாவானது தொடர்ந்து 8 நாட்கள் பூசை வழிபாடுகள் நடை பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி பொங்கல் இடம்பெறும்.

பண்டைய மரபுப்படி மீசாலை புத்தூர் சந்தியில் இருந்து பண்டமெடுக்கும் வைபவம் ஆரம்பமாகி ஆனையிறவு, பரந்தன், கண்டாவளையூடாக ஆலயத்தை சென்றடையும். இப்பொங்கல் விழாவையொட்டி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (அ-2-266)

## கழிவுத் தேயிலை நிலையம் முற்றுகை

கழிவுத் தேயிலை பொதி செய்யும் நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து 21 ஆயிரம் கிலோ எடையுள்ள கழிவு தேயிலையை மீட்டெடுத்துள்ளனர்.

வாரியபொல, கெதர பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி நிலையத்தில் கழிவு தேயிலையை பொதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்த்தன குறிப்பிட்டார். வாரியபொல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவ்ல் ஒன்றையடுத்து கழிவு தேயிலை பொதி செய்யும் நிலையம் திடீரென முற்றுகையிடப்பட்டுள்ளது. (அ-2)

## தமிழின உணர்வை வெளிப்படுத்த

# கறுப்புப் பட்டி அணிந்த பெண் மீன் வியாபாரிகள்

கடலூரைச் சேர்ந்த பெண் மீன் வியாபாரிகள் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கண்டனம் தெரிவித்து கறுப்புப் பட்டியை தங்களது ஜாக்கெட்டில் அணிந்து கொண்டு வியாபாரம் செய்தது அனைவரையும் நெகிழ வைத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று இந்திய அரசை வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

மாணவர்களே இந்தப் போராட்டத்தை உணர்வெழுச்சியுடன் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடலூரில் பெண் மீன் வியாபாரிகளும் கறுப்புப் பட்டி அணிந்து தங்களது உணர்வை வெளிப்படுத்தினர்.

கடலில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொல்வதை கண்டித்தும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவித்து தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும் கடலூர் மீன் சந்தையில் மீன் விற்கும் பெண்கள் நேற்று கறுப்புப்பட்டி அணிந்து மீன் விற்றனர்.

சுமார் 500 இற்கும் மேற்பட்ட மீன் விற்கும் பெண்கள் இலங்கை அரசுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் கறுப்புப் பட்டி அணிந்து இருந்தனர். இதை அனைவரும் பார்த்து நெகிழ்ந்தனர். (அ-2)







இலங்கை வங்கியின் வவுனியா நகர்க்கிளையினால் மகளிர் தினத்தையொட்டி மகளிர் பொற் கணக்குகள் ஆரம்பிக்கும் நிகழ்வு வவுனியாவில் அண்மையில் நடைபெற்றது. வவுனியா பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸாருக்கு கணக்கு திறந்து வைக்கப் பட்டதையும் கற்குழி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதையும் வவுனியா நகர் கிளை முகாமையாளர் றோய் ஜெயக்குமார் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் ஆசிரியர்களுக்கு கணக்கு புத்தகம் வழங்கியதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிய பக்கமெல்லாம் தமிழகத்தில் தமிழீழத் தீ !

## தமிழகத்தின் பல இடங்களிலும் மாணவர்கள் நடத்திய போராட்டங்களின் நேரடி அறிக்கை !

லயோலா பற்ற வைத்த லங்கா தீ கொழுந்து விட்டு எரிகிறது; தணலாய் கொதிக்கிறது தமிழகம். ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு எதிராக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்களை மிஞ்சி விட்டது கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டங்கள்.

கோயம் பேடு பகுயில் உள்ள செங்கொடி அரங்கத்தில் லயோலா கல்லூரி மாணவர்கள் எட்டுப்பேர் நடத்திய உண்ணாவிரதப்



போராட்டம் நான்காவது நாளில் வாபஸ் வாங்கப்பட்டாலும், அவர்கள் ஆரம்பித்து வைத்த தூண்டுதல் தமிழக மாணவர்கள் அனைவ்ரையும் வீறுகொண்டு வீதிக்கு வரவைக்கக் காரணமாகிவிட்டது.

**சென்னை:** அப்புறப்படுத்த நினைத்த பொலீஸ்!

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 11 ஆம் தேதி தொடங்கிய தொடர் உண்ணாவிரதப் போராட்டம், இன்னும் நீடிக்கிறது. மற்ற கல்லூரி மாணவர்களின் போராட்டத்தை விட சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் அதிக ஆபத்து மிகுந்தது என்று காவல்துறை கருதியதோ என்னவோ... நீதிமன்ற வளாகத்தின் உள்ளே வெடிகுண்டு இருக்கிறது, அதனால், சோத்னை நடத்த வேண்டும் என்று- நீதிமன்ற வளாகத்தை விட்டு அவர்களை வெளியேற்றினர். அவர்களை வெளியேற்ற மட்டும்தான் காவல்துறையால் முடிந்தது. ஆனால், போராட்டம் தொடர்கிறது.

சென்னை சட்டப் பல்கலைக்கழக மாணவர்களும் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இதில், ஆந்திராவைச் சேர்ந்த மாணவி ஒருவர் கடந்த நான்கு நாட்களாக உண்ணாவிரதத்தில் பங்கேற்று வருகிறார். சென்னைப் பல்கலைக்கழக மாணவிகள் விடுதிக்குள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி தங்களின் ஆதரவைப் பதிவு செய்தனர்.

லயோலா கல்லூரி மாணவர்கள், கையெழுத்து இயக்கம் தொடங்கி உள்ளனர். மாநிலக் கல்லூரி, மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரி, வேளச்சேரி





குருநானக் கல்லூரி, துரைப்பாக்கம் டி.பி. ஜெயின் கல்லூரி என்று சென்னையில் உள்ள பல கல்லூரி மாணவர்களும் உணர்வுபூர்வமாகப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

**செங்கல்பட்டு:** இதயத்துடிப்பு குறைந்தது

செங்கல்பட்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் 11 பேர் கல்லூரி வாசலில் பந்தல் அமைத்து உண்ணாவிரதத்தில் அமர்ந்துள்ளனர். கல்லூரி மாணவர்கள் பலரும் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு அவர்களுக்கு ஆதரவளிக்கின்றனர். மாவட்ட ஆட்சியர் சித்திர சேனன் வந்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டும், மாணவர்கள் மசியவில்லை.

13 ஆம் திகதி மூன்றாவது நாளாக உண்ணாவிரதம் இருந்த மாணவர்களில் சிலருக்கு உடல்நிலை மோசமானதை அறிந்த ம.தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் மல்லை சத்யா, மருத்துவக் குழுவொன்றை அழைத்துவந்தார். மாணவர்களை பரிசோதனை செய்த மருத்துவக் குழு, மாணவர்களின் இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் குறைந்துவிட்டது; உடனே சிகிச்சை அளிக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்தனர்.

கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் பொலீசார் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதை அடுத்து உடல்நிலை பாதிக்கப்பட்ட மூவரை மட்டும் மருத்துவச் சிகிச்சைக்கு அனுப்பிவைத்தனர் மாணவர்கள். மற்றவர்கள் தொடர்கின்றனர்.

**கோவை:** விமான நிலையத்துக்குள் நுழைந்தனர்

கடந்த 11 ஆம் திகதி முதல் கோவை சட்டக்கல்லூரி மற்றும் அரசுக் கலைக்கல்லூரி மாணவர்கள் 22 பேர், ம.தி.மு.க. அலுவலகத்தில் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கோவை பாரதியார் பல்கலைக் கழக மாணவர்கள் எட்டுப்பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக 100-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் குதித்து இருக்கின்றனர்.

கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள், இலங்கையில் தனித் தமிழீழம் அமைய பொதுவாக் கெடுப்பு நடத்த வலியுறுத்தி வகுப்புக்களைப் புறக்கணித்து போரராட்டத்தில் ஈடுபட்டனர். தனியார் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் குதிக்கத் தயாராகி வருகின்றனர்.

13 ஆம் திகதி மதியம் சட்டக் கல்லூரி மாணவர்கள் 28 பேர் கோவை விமான நிலையத்துக்கு வந்தனர். காவல் துறையினர் அவர்களிடம் சமாதானம் பேசியும் கலைந்து செல்லாமல், மூன்று அடுக்குப் பாதுகாப்பையும் மீறி உள்ளே சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். வேறு வழிஇல்லாமல் அனைவரையும் பொலீசார் கைது செய்தனர்.

இதேபோல் காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி, சேலம் சட்டக் கல்லூரி, தேனி கம்மவார் கல்வியியல் கல்லூரி, கடலூர் அரசுக் கலைக்கல்லூரி, செயின்ட் ஜோசப், கிருஷ்ணசாமி கல்லூரி, புதுச்சேரி அரசு சட்டக் கல்லூரி ஆகியவற்றிலும் மாணவர் போராட்டம் தொடங்கியுள்ளது. தமிழக மாணவர்களின் போராட்டங்களாவது, மத்திய அரசை உலுக்குமா?

**மாணவர் போராட்டக்குழு அமைப்பு**

இலங்கைக்கு எதிரான அனைத்துக் கல்லூரி மாணவர்களின் போராட்டங்களை ஒருங்கிணைக்கும் வகையில், தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. கடந்த 14 ஆம் திகதி சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த இந்தக் குழுவினர், ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானத்தை நாங்கள் ஏற்கவில்லை. வல்லாதிக்க நாடான அமெரிக்கா நினைத்திருந்தால் ஈழத்தில் இனப்படுகொலை நடந்த நேரத்தில் அதைக் தட்டிக் கேட்டுத் தடுத்திருக்கலாம். அப்போது சில இலாபங்களுக்காக அமைதியாக வேடிக்கை பார்த்த அமெரிக்காவுக்கு, இப்போது அந்தக் கேள்வி கேட்கும் உரிமையே கிடையாது.


எங்கள் போராட்டம் விடாது தொடரும். தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும் 18ஆம் திகதி ஒரே நேரத்தில் ராஜபக்ச, மன் மோகன்சிங் உருவ பொம்மைகளை எரித்துப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்த உள்ளோம் என்று கொந்தளித்தார்.

**வேலூர்:** டி.சியைக் கொடுத்திடுவோம்!

வேலூர் ஊரீசு கல்லூரியில் கடந்த 11ஆம் திகதி காலை 10 மணிக்கே 50 மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் உண்ணாவிரதம் தொடங்கினார்கள். கல்லூரி முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தியும் யாரும் கலைந்து செல்லவில்லை. வேலூர் தெற்கு காவல் நிலைய அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையும் தோல்விதான்.

போராட்டங்களில் கலந்துகொள்பவர்கள் அனைவருக்கும் டி.சி தரப்படும் என்று மிரட்டியும் அவர்கள் மசியவில்லை. ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி மாணவர்கள் 12 ஆம்திகதி உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

குடியாத்தம் திருமகள் ஆலைக் கல்லூரி மாணவர்களும் அன்றைய தினம் அடையாள உண்ாவிரதம் மேற்கொண்டனர். 14 ஆம் திகதியில் இருந்து வேலூர் சட்டக் கல்லூரி மாணவர்கள் 18 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.



**திருச்சி:** தாக்கப்பட்ட பொலிஸ் வாகனம்

திருச்சியில் கடந்த 12 ஆம் திகதி முதல் சட்டக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். கல்லூரி வளாகத்தில், தொடங்கிய உண்ணாவிரதத்தில், நாளுக்கு நாள் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

13 ஆம்திகதி புரட்சிகர மாணவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் 35 பேர் திருச்சி டி.வி.எஸ் டோல்கேட் அருகே ராஜபக்ச மன்மோகன் சிங் ஆகியோரது கொடும்பாவியை எரித்தனர். அப்போது காவல் துறையினர் அவர்களில் எட்டுப் பேரை கைது செய்தனர். அப்போது அதனைக் கண்டித்து மீண்டும் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

பொலீஸ் துணைக்கமிஷனர் செல்வகுமார் மாணவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த, எட்டு பேரும் விடுவிக்கப்படடனர். அப்போது கூட்டத்தில் இருந்த மாணவர் ஒருவர் பொலீஸ் வாகனத்தை ஓங்கி அடித்தார். அதனால், கோபம் அடைந்த காவலர் ஒருவர் அந்த மாணவரை அடிக்க... மீண்டும் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால், திருச்சியில் இருந்து செல்லும் முக்கிய சாலைகளில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

சட்டக்கல்லூரி முதல்வர், ம.தி.மு.க. பிரமுகர்கள் மற்றும் சீனியர் வழக்கறிஞர்கள், பொதுமக்களுக்கு இடையூறாக மாற்றிவிடாதீர்கள் என்று மாணவர்களிடம் எடுத்துச் சொன்ன பிறகே, அவர்கள் அமைதியானார்கள். இந்தப் போராட்டத்தால் மூன்று மணி நேரத்துக்கும் மேல் திருச்சி ஸ்தம்பித்தது.

**மதுரை:** பூட்டப்பட்ட தபால் நிலையம்!

மதுரையில் பெரும்பாலும் அனைத்து கல்லூரி மாணவர்களும் உள்ளிருப்பு, ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர். சட்டக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கடந்த 11 ஆம் திகதி ஸ்டேட் பாங் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அடுத்த நாள் மாவட்ட ஆட்சியர் அலுவல கம் அருகில் இருக்கும் தபால் நிலையத்தைப் பூட்டினர். இதனால் கூச்சல் குழப்பம் ஏற்பட... காவல் துறையினர் 17 மாணவர்களை கைது செய்தது.

13 ஆம் திகதி மதுரை காமராஜர் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நாள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் மூவர் கல்லூரி வளாகத்தில் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டுவருகின்றனர்.

**நெல்லை:** மிரட்டிய கல்லூரி நிர்வாகம்!

நெல்லையில் கடந்த 11 ஆம் திகதியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் தீவிரமாக இருக்கிறார்கள். இவர்களில் பலருக்கு உடல் நிலை மோசமானதைத் தொடர்ந்து மருத்துவர்கள் தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறார்கள்.

பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி மாணவர்கள் 11 பேர் கல்லூரியில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்

இந்த நிலையில் மாணவர்களுக்கு ஆதரவாக ம.தி.தா. இந்து கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் இறங்கி உள்ளனர். நெல்லை மாவட்டத்தில் போராட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது; பல இடங்களலும் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் வெவ்வேறு மாணவர்களின் உடல்நிலை மோசமான நிலையை எட்டி உள்ளது. ஆயனும் போராட்டம் தொடர்கிறது

**நன்றி: ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள் அணிநடைக்கு தயாராக அணிவகுத்து நிற்பதையும் ப.இராஜகோபாலன் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வெற்றிக் கேடயம் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

# நாராயணசாமியை முற்றுகையிட முனைந்த வாழ்வுரிமை கட்சியினர்

## காங்கிரஸால் முறியடிப்பு

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் ஐ.நா தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க கோரியும் இலங்கை பிரச்சினையில் கண்டு கொள்ளாத மத்திய அரசை கண்டித்து மத்திய மந்திரி நாராயணசாமியை தமிழக வாழ்வுரிமை கட்சியினர் முற்றுகையிட முயற்சித்தனர்.

இது குறித்து தெரியவருவதாவது,

அமைச்சர் நாராயணசாமி ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் புதுவை வருவது வழக்கம். தனது அலுவலகத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அமைச்சர் நாராயணசாமி தனது அலுவலகத்துக்கு வருவதாக காங்கிரஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனால் அமைச்சரைச் சந்தித்து அலுவலக வளாகத்தில் காங்கிரஸார் திரண்டிருந்தனர். அப்போது திடீரென பொலிஸார் அங்கு வந்தனர்.

இதையடுத்து காங்கிரஸார் பொலிஸாரை என்ன? எதற்காக வந்தீர்கள் என விசாரித்தனர். அப்போது இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண் டுவரும் ஐ.நா தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க கோரியும் இலங்கை பிரச்சினையில் கண்டுகொள்ளாத மத்திய அரசை கண்டித்து அமைச்சர் நாராயணசாமியின் அலு வலகத்தை தமிழக வாழ்வுரிமை (வேல்முருகன் கட்சியினர்) முற்றுகையிட வரவுள்ளதாக தெரிவித்தனர்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த காங்கிரஸார் எதிர் தாக்குதலுக்கு தயாரானார்கள் . இந்த நிலையில் வேல்முருகன் கட்சியினர் 10பேர் மோட்டார் சைக்கிளில் நேராக மோட்டார் சைக்கிளில் கம்பன் கலை அரங்கத்துக்குள் நுழைந்த அவர்களை தயாராக நின்று கொண்டிருந்த காங்கிரஸார் தடுத்து நிறுத்தி தாக்கினர்.

இதனால் வேல்முருகன் கட்சியினர் மோட்டார் சைக்கிளை போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். ஆனால் காங்கிரஸார் அவர்களை விடாமல் ஓட ஓட விரட்டி தாக்கினர்.

மேலும் பொலிஸாரும் வேல்முருகன் கட்சியினரை தாக்கினர். அப்போது தப்பியோடிய வேல்முருகன் கட்சியை சேர்ந்த சிலர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர்.

அதன் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற காங்கிரஸார் பொலிஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மந்திரி நாராணயணசாமியை முற்றுகையிட வந்தவர்களை எப்படி அனுமதிக்கலாம் எனக் கூறி ஆவேசமாக பேசினார்கள்

இதையடுத்து பொலிஸார் முற்றுகையிட வந்த தமிழக வாழ்வுரிமை கட்சியின் புதுவை மாநில தலைவர் உட்பட 3 பேரை கைது செய்தனர். இந்த சம்பவம் புதுவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(அ-2)

# இந்தியாவை ஆட்சி செய்யும் தகுதி காங்கிரசிற்கு இல்லை

## பாரதீய ஜனதா கட்சி பாய்ச்சல்

காங்கிரஸ் கட்சிக்கு இந்தியாவை தொடர்ந்து ஆட்சி செய்யும் தகுதி இல்லை என்று பாரதீய ஜனதா கட்சியின் பேச்சாளர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை தமிழர் விடயத்தில் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை.

இந்த விடயத்தில் தமிழகத்தில் இந்த அளவு ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புகளும் வலியுறுத்தப்படுகின்ற நிலையில் மத்திய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான நிலையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசாங்கத்துடன் இணைந்தே இருக்கின்றமை அது தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்ற விடயம் ஒன்றில் செயற்பட முடியாத அரசாங்கம் ஆட்சி நடத்த தகுதி அற்ற ஒன்றாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# புத்தரை பச்சை குத்தியது தவறாகாது-பிரிட்டன்

புத்தரின் உருவத்திற்கு பச்சை குத்தி இருக்கின்றமை பௌத்த மதத்தை அவமதிப்பதாக அமையாது என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் புத்தர் உருவத்தை கையில் பச்சைக்குத்தி இருந்ததன் காரணமாக பிரித்தானியர் ஒருவர் நாடு கடத்தப்பட்டார். இதனைத் தொடர்ந்து இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் பௌத்த மதச்சின்னங்களை எடுத்துச் செல்வது, அதனை புகைப்படம் எடுப்பது போன்ற விடயங்களை பிரித்தானியா தமது பயண கட்டுப்பாட்டு அறிக்கையில் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிக்குகள் மீதான தாக்குதல் உயர் மட்டத்தின் கவனத்துக்கு

பௌத்த பிக்கு தாக்குதல் விடயம் இந்தியாவின் உயர்மட்ட கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர் பகுதியில் வைத்தே புத்த பிக்கு தாக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தஞ்சாவூர் ஆலயத்துக்கு கல்வி சுற்றுலா சென்றிருந்த குறித்த பிக்கு தாக்குதலுக்கு உட்பட்டார். இது தொடர்பில் இலங்கை உயர்ஸ்தானிகரகம் தமிழக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

அத்துடன் இதனை இந்தியாவின் உயர் மட்டத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளதாக குறித்த பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் நாம் தமிழர் இயக்கம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் 5 பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(அ-2)

# ஹலால் தேவையென்றால் அல்லாஹ் நாட்டுக்கு செல்லுங்கள்

## ஒமல்பே எம்.பி கர்ஜிப்பு

(கொழும்பு)

ஹலால் தேவையென்றால் அல்லாஹ் உள்ள நாட்டுக்குச் செல்லுங்கள் .இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் தலைக்கு தொப்பி வைத்தாலோ பெண்கள் பர்தா அணிந்தாலோ அதில் தவறில்லை. எனினும் எங்களுக்கும் தொப்பியும் பர்தாவும் அணிவிக்க முயற்சித்தால் அதனை ஏற்க முடியாது.

ஹலாலுக்கு பௌத்தர்களோ பௌத்த பிக்குகளோ எதிர்ப்பை வெளியிடவில்லை. எதிர்ப்பை வெளியிட வேண்டிய அவசியமும் கிடையாது. ஹலால் பேரில் இடம்பெறும் துர்நடத்தைகளையே நாம் எதிர்க்கின்றோம்.

முஸ்லிம் கலாசாரத்தை இஸ்லாமிய மத கோட்பாடுகளை ஏனைய இன சமூகத்தின் மீது திணிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது வழங்கப்பட்ட உதவிகளை ஹலால் ஹராம் என முஸ்லிம்கள் வகையீடு செய்து பெற்றுக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★1279-யாமென் என்ற இடத்தில் இடம் பெற்ற சமரில் மங்கோலியாவின் வெற்றியுடன் சீனாவில் சோங் அரச பரம்பரை முடிவுக்கு வந்தது.

★1861-நியூசிலாந்தில் முதலாவது தரனாக்கி போர் முடிவுக்கு வந்தது.

★1915-புளூட்டோவின் ஒளிப்படம் முதற் தடவையாக எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கோளாக கருதப்பட வில்லை.

★1918-நேர வலயங்களை ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நிறுவி பகலொளி சேமிப்பு நேரத்தை அங்கீகரித்தது.

★1932- சிட்னி துறைமுக பாலம் திறந்து வைக்கப்பட்டது.

★1944- இரண்டாம் உலகப் போர்: நாசி படைகள் ஹங்கேரியைக் கைப் பற்றினர்.

★1945-இரண்டாம் உலகப் போர் ஜப்பானில் யூ.எஸ்.எஸ் பிராங்கிளின் என்ற அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதில் 800 பேர் உயிரிழந்தனர்.

★1972-இந்தியாவும் பங்காள தேசமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★1982-போக்லாந்து போர்: ஆர்ஜெண்டீனியர்கள் தெற்கு ஜோர்ஜியா தீவில் தரையிறங்கினர்.

★2002-ஐக்கிய அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பு முடிவுக்கு வந்தது.

### பிறப்புக்கள்

★1883 வால்டர் ஹவேர்த், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (இ.1950)

★1900-பிரெடெரிக் ஜோலியோட்,நோபல் பரிசு பெற்றவர் (இ.1958)

★1943- மரீயோ மொலீனா, நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர்.

### இறப்புக்கள்

★1950-எட்கார் பரோஸ், அமெரிக்க எழுத்தாளர் (பி.1875)


★1950-வால்டர் ஹவேர்த், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (பி.1883)

★2008-ஆதர் சி.கிளார்க், அறிவியல் புதின எழுத்தாளர் (பி.1917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பது காலத்தின் தேவை

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு



ஒரு இனத்தின் கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் முழங்காவில் கிருஸ்ணாநகர் கிராமத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற புண்ணிய கிராம நிகழ்ச்சி திட்டம் 2013 நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம், இடம் பெயர்வு, முகாம் வாழ்க்கை போன்ற பல காரணங்களால் எமது இனத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து விட்டது. கலாசார புறழ்வுகளும் சீரழிவுகளும் நாளாந்தம் செய்திகளாக பார்க்கின்ற போது மிகவும் வேதனையாக உள்ளது. எங்களுடைய இளம் சமுதாயத்தின் எதிர்காலம் குறித்த அச்சம் காணப்படுகிறது. எனவே தான் இன்றைய காலத்தின் தேவையாக இனத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணி பாதுகாத்து வளர்க்க வேண்டிய மிகப் பெரும் தேவையுள்ளது. அதனடிப்படையில் இந்த ஆலயமும் அதன் தலைவர் குபேந்திரனதும் காலத்தின் தேவையையொட்டியதான இந்த பணி பாராட்டப்பட வேண்டியது. தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு செல்லப்பட வேண்டியது.

இங்கு இடம்பெற்ற அறநெறி வகுப்புக்களுக்கு வருகின்ற சிறார்கள் முதல் இளம் தலைமுறையினர் ஒழுக்க நெறி வாழ்க்கை பழக்க வழக்கங்கள் இவர்கள் எதிர்காலத்தில் சிறந்த ஒரு சமூகமாக வளர்வார்கள் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிகழ்வின் போது கிருஸ்ணா கலா மன்றத்தினரால் தயாரிக்கப்பட்ட பள்ளிக்காதல் குறும்பட வெளியீடும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நிர்வாகத் தெரிவு

இலங்கை பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்தின் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக கே. கதிரமலை, உப தலைவராக எஸ்.மாணிக்க தியாகராஜா, செய லாளராக எஸ்.சிவலிங்கம், உபசெயலாளராக என். எஸ்.திருச்செல்வம், பொருளா தார எஸ். ஸ்ரீ கண்ணன், கணக்காளராக கே. சற்குணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-3-19)

# மோட்டார் சைக்கிளை பெற்றுக் கொள்ளவும்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த ஒருவருட காலமாக உரிமை கோரப்படாத நீலநிற TVS மோட்டார் சைக்கிளை ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளதாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் திருமதி சசிகரன் வாசுகி தெரிவித்துள்ளார். பருத்தித்துறை பொலிஸாரினால் அநாதரவாக்கப்பட்ட நிலையில் NPTH 9639 இலக்க முடைய நீலநிற மோட்டார் சைக்கிள் கடந்த 2012ஆம் ஆண்டு 2ஆம்மாதம் 10 ஆம் திகதி மீட்கப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

இது வரை காலமும் உரிமையாளரினால் உரிமை கோரப்படவில்லை. எனவே பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படுமுன் உரிமையாளர் இதனை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-3-24)

# கோட்ட மட்ட போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் வவுனியா கோட்ட மட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகளை கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜ் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

**15 வயது ஆண்கள் (கீழ்ப்பிரிவு)**

வவுனியா இந்துக் கல்லூரி (முதலாமிடம்), அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலம் (இரண்டாமிடம்), பண்டாரிகுளம் விபுலானந்தாக் கல்லூரி (மூன்றாமிடம்).

**17 வயது ஆண்கள் பிரிவு**

வவுனியா இந்துக் கல்லூரி (முதலாமிடம்), வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (இரண்டாமிடம்), வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் (மூன்றாமிடம்).

**19 வயது ஆண்கள் பிரிவு**

வவுனியா இந்துக் கல்லூரி (முதலாமிடம்), பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி (இரண்டாமிடம்), வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (மூன்றாமிடம்).

**பெண்கள் பிரிவு**

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் (முதலாமிடம், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் (இரண்டாமிடம்). (அ-2-266)

# தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க இந்தியா வலியுறுத்த வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை குழு அறிக்கை

**இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒரு உயர் மட்ட நம்பகத்தன்மை வாய்ந்த சுயேட்சையான விசாரணைக்கு அந்நாட்டு அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றத்தில் இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு கூறியுள்ளது.**

இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை கட்சியின் அரசியல் தலைமைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இதுவரையிலும் அர்த்தபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

ஏதுமறியாத அப்பாவி மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக போதுமான ஆதரங்கள் உள்ளன.

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

போரின் போது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையம் அளித்த பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென அத்தீர்மானம் வலியுறுத்தியது. ஆனாலும் இதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இலங்கை உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒரு உயர் மட்ட நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் சுயேட்சையான விசாரணைக்கு இலங்கை அரசு ஒப்புக்கொள்ள வேண்டுமென ஐ.நா. மனித உரிமை மன்றக்கட்டத்தில் வற்புறுத்தும் விதத்தில் இந்திய அரசின் நிலைப்பாடு இருக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு எந்தவிதமான சுயாட்சி அதிகாரமும் அளிக்கப்படாது என்று அந்நாட்டு ஜனாதிபதி மகிந்த அறிவித்திருப்பது மிகவும் கவலையளிக்கக்கூடிய விடயமாகும்.

இப்படி அறிவித்திருப்பதன் மூலம் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசியலமைப்பு சட்டத்தின் 13ஆவது திருத்தத்தில் உறுதியளிக்கப்பட்டிருப்பதைவிட மேலும் கூடுதலாகவே உரிமைகள் அளிக்கப்படும் என்று முன்பு கூறியிருந்த தனது சொந்த நிலைப்பாட்டிலிருந்தே அவர் பின் வாங்கியிருந்தார்.

இந்திய அரசு இந்த பிரச்சினையையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் போதுமான அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் ஓர் அரசியல் தீர்வுக்கு வருமாறு இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# மூன்று இந்திய வியாபாரிகளுக்கு 27 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கரவெட்டி)


வடமராட்சி உடுப்பிட்டி பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்த இந்தியர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையின் வெளி அரங்கப் பகுதியில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவை பெற்று இலங்கை வந்த மூன்று இந்தியர்களும் வடமராட்சி உடுப்பிட்டி பிரதேசத்தில் அனுமதி பத்திரம் இன்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்கள் வீடொன்றில் தங்கியிருந்த வேளை கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியா திருச்சி மாவட்டத்தை சேர்ந்த மூன்று இந்திய தமிழர்களையும் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் மூன்று இந்தியர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறும் இவர்களுக்கு கைவிலங்கு இடக்கூடாது எனவும் அவர்கள் கைது செய்யப்பட்ட விடயம் இந்திய தூதரகத்திற்கு தெரியப்படுத்துமாறும் அவர்களுடைய கடவுச்சீட்டை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (அ-3-24)



முழங்காவில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலையில் பயிலும் தந்தையை இழந்த 10 மாணவிகளுக்கு, துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. இதனை தொண்டு நாத சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோசனி கனகரட்ணம் வழங்கி வைத்ததைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன் பிடிக்கப்படுகிறது

## கடற்றொழிலாளர்களுக்கான கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வரை ரோலர் படகு மூலமான மீன்பிடி நடவடிக்கையினை நிறுத்த முடியாது என குருநகர் பகுதியில் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் காட்டமாக தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக தங்கூசி வலைகளையும் டைனமைற் போன்ற சாதனங்களையும் பயன்படுத்தி தென்னிலங்கை மீனவர்களும் தென்னிந்திய மீனவர்களும் எமது கடற்பரப்பில் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் போது, நாம் ஏன் ரோலர் படகு மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது எனவும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

யாழ்.மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரின் அழைப்பின் பேரில் குருநகர் கலாசார மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கடற்தொழிலாளர்களுக்கு கூட்டமொன்று இடம் பெற்றது.

இதில் கடற்தொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி, யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் வடக்கு மாகாணத்தில் கடற்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வதற்கென ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளப்படவுள்ள அ பிவிருத்தி திட்டங்களுக்கான ஆலோசனைகளும் வேண்டுகோள்களும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குருநகர் பகுதி மீனவர்கள் சிலர் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்என ஏனைய மீனவர்களினால் கோரிக்கை விடப்பட்ட போதுகுருநகர் பகுதியைச் சேர்ந்த ரோலர் படகினைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் சிலர் எழுந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துங்கள். அதன் பின்பு நாங்களும் ரோலர் படகு மூலமான தொழில் நடவடிக்கையினை நிறுத்துகின்றோம் எனக் கூறியிருந்ததோடு வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

இதேவேளை யாழ்.மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் மேற்படிக் கூட்டத்தை உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் கூட்டி விட்டார் எனக் கூறி அந்தச் சம்மேளனத்தின் உறுப்பினர்களும் முரண்பட்டுக்கொண்டதால் நேற்றைய கூட்டம் பெரும் குழப்பத்தில் முடிந்தது. (அ-6)

# குடியிருப்புக்களில் மோதியது ஜெட்

## நான்கு பேர் பலி

அமெரிக்க விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஏற்பட்ட கோளாறினால் அருகிருந்த குடியிருப்புக்கள் மேல் மோதியதில் நால்வர் பரிதாகபரமாக உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஒக்லஹாமா மாநிலத்தைச் சேர்ந்தவர் மிகப் பெரிய தொழில் அதிபருக்குச் சொந்தமான ஒரு ஜெட் விமானத்தில் மேலும் மூன்று பேருடன் பயணம் செய்தார். இன்டியானா மாநிலத்திலுள்ள சவுத் பெண்ட் விமானநிலையத்தில்தரையிறங்க முற்பட்டபோது ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறினால் விமானம் பாதை விலகி அருகிலிருந்த குடியிருப்புக்களின் மேல் மோதியுள்ளது.

இதில் பயணம் செய்தவர்களில் இரண்டு பேரும் வீட்டில் இருந்த இரண்டு நபர்களும் இறந்தனர். எனினும் வீட்டில் இருந்த சிறுவன் ஒருவன் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளான்.விமானம் மோதியதில் 3 வீடுகள் சேதமடைந்தன. இதையடுத்து அங்கிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு பத்திரமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

குறித்தவிமானம் முதலாவது வீட்டின் கூரையில் இலேசாக உரசி பின் இரண்டாவது வீட்டை உடைத்து மூன்றாவது வீட்டுடன் மோதி நின்றுள்ளது. இந்த பீச் கிராப்ட் விமானம் மணிக்கு 852 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் தன்மைவாய்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# உலகின் வெப்பநிலை உயர்வடைந்துள்ளது

உலகின்வெப்பநிலைஇதுவரைஇல்லாத அளவுக்கு உயர்வடைந் துள்ளது. குறைந்த பட்சம் 4 ஆயிரம் வருடங்களில் இல்லாத அளவு க்கு வெப்பநிலை உயர்வடைந்துள் ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனித இனத்தின் தவறான செயற்பாடுகளால் வெப்பநிலையில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இந்த வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லும்.இதுவரை நவீன புவியியல் யுகத்தில் நாம் கண்டிராத அளவுவெப்பத்தைநாம்உணர்வோம்.

நவீன புவியியல் யுகத்தின் ஒரு பகுதி 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. இந்த காலத்தில் தான் அதிக வெப்பத்தை உமிழ்ந்து கொண்டிருந்த சூரியஒளியின் அளவில் மாற்றம் ஏற்பட்டது.வட துருவங்களில் பனிக்கட்டி களின் உருகும் அளவு அதிகரித் துள்ளது. 8 ஆயிரம் ஆண்டுகளு க்கு முன்னர்தான் மனித நாகரிகம் உருவானது.

அதன் பின்னர் தொடர்ந்து வளர்ச்சி அடைந்த மனித நாகரிகம் இந்த வெப்பநிலை மாற்றத்துக்கு காரணமாக இருக்கிறது என்று ஒரேகான் மாநில பல்கலைக்கழக ஆராய்ச்சி தெரிவித்துள்ளது. (அ-2)

# எகிப்து ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து தெற்குப் பகுதியில் கலவரம்



எகிப்து ஜனாதிபதி அந்நாட்டின் தெற்குப் பகுதிக்கு சென்ற நிலையில் மேர்சியின் ஆதரவாளர்களுக் கும் அதிருப்தியாளர்களுக்கும் இடையில் கலவரம் வெடித்துள்ளது.

எகிப்து ஜனாதிபதி முகமது மேர்சி அந்நாட்டின் தெற்குப் பகுதிக்கு சுற் றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின்போது சொஹாக் மாகாணத்தில் புதிய நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

ஹோஸ்னி முபாரக் ஆட்சி இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த புரட்சியின் போது நீக்கப்பட்டது. அப்போது பதவியேற்ற மேர்சி, ஊழல் பின்தங்கிய நிலை மற்றும் உதாசீனம் ஆகியவற்றின் காலம் முடிந்தது என்று கூறி எகிப்தின் தென்பகுதியில் வாழும் மக்களின் நம்பிக்கையை பெற்றார்.

எனினும் தெற்குப் பகுதியின் முன்னேற்றத்திற்கு அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை என்றும் அரசு தங்களை புறக்கணிக்கிறது என்றும் மக்கள் குற்றஞ் சாட்டி வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் தெற்குப் பகுதி சென்ற அவர் புதிய திட்டங்களை ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

அவர் தனதுரையில் கூறியதாவது, சொஹாக் மாகாணம் எகிப்தி லிருந்து பிரிக்கமுடியாத முக்கிய அங்கமாகும். உங்களின் கோரிக் கைகளையும் பரிந்துரைகளையும் நாங்கள் அறிந்து கொண்டோம். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம் எனக்கூறினார்.

இவர் உரையாற்றிய அரங்கத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் மேர்சிக்கு எதி ராக கோசமிட்ட வண்ணம் அரங் கத்திற்குள் நுழைய முற்பட்டனர். இதையடுத்து அரங்கத்திற்குள்ளே இருந்தமேர்சியின்ஆதரவாளர்களால் அவர்கள் தடுத்து நிறு த்தப்பட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும்இடையே கலவரம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிசார் தடியடி நடத்தியதுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பயன்படுத்தினர்.

மேலும் மாணவர்களின் எதிர்ப்பால் சொஹாக்பல்கலைக் கழக த்திற்கு மேர்சி மேற்கொள்ள இருந்த பயணமும் இரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**Study in MALAYSIA**

**மலேசியாவில் உயர்கல்வி**

மலேசிய அரசாங்கத்தினால் அங்கிகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY

**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகமை: கணிதம், ஆங்கிலம் உற்பட O/L சித்தி.

மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

**Call : 0777-767818**

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.

அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானத்திற்கு நீங்கள் தயாரா?




வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்

CSE முதலீட்டாளர் தினம் 2013

யாழ்ப்பாணம் | 2013 மார்ச் 23 மு.ப 10.00 முதல் பி.ப 3.00 வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்த இந்தியாவே முயற்சிக்க வேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை

(சென்னை)

**இலங்கை மீது பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்பதுடன் அந்நாட்டின் மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். தனித் தமிழீழம் அமைப்பது தொடர்பாக உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரி மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.**

தமிழீழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசே மேற்கொள்ள வேண்டும் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணை நடத்தும் வகையில் அமெரிக்கத் தீர்மானத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் சார்பில் நாளை மறுதினம் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற உள்ளதாக பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இப்போராட்டத் தீயை கல்லூரிகளுக்கு விடுமுன்ற என்ற தண்ணீரை ஊற்றி அணைக்க மாநில அரசு முயன்றது. ஆனால், அரசு ஊற்றிய தண்ணீர் மண்ணெண்ணெய் ஆக மாறி போராட்டத்தை கொழுந்து விட்டெரியச் செய்திருக்கிறது. கல்லூரிகளும் விடுதிகளும் மூடப்பட்ட பிறகும் கூட மாணவர்கள் வீதி ஓரங்களில் தங்களது போராட்டங்களை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இப்போராட்டங்களில் ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு இணையாக மாணவர்கள் தங்களின் உயிரை துச்சமென மதித்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் பங்கேற்பதற்காக பசுமைத் தாயகம் அமைப்பின் செயல்ர்ளர் இர.அருள், வழக்கறிஞர் கே.பாலு, முன்னாள் மக்களவை உறுப்பினர் இரா. செந்தில் ஆகியோர் ஜெனீவா புறப்பட்டுச் செல்கின்றனர்.

ஜெனீவா கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்துள்ள பல்வேறு நாடுகளின் தூதர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ள இவர்கள், இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க இருப்பதுடன் அந்நாட்டின் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்த உள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போராட்டத்தை ஆதரித்து வெற்றிபெறச் செய்வது தமிழராக பிறந்த நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மாணவர்களின் போராட்டத்திற்கு ஆரம்பம் முதலே ஆதரவு அளித்து வரும் பாட்டாளி மக்கள் கட்சி இந்தப் போராட்டத்திற்கும் முழு ஆதரவை அளிக்கும். பாட்டாளி மக்கள் கட்சியின் மாணவர் அமைப்பான தமிழக மாணவர் சங்கத்தினர் இந்தத் தொடர் முழக்கப் போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொள்வார்கள்.

இலங்கை நிலைமை குறித்த ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கை நாளை ஆணையக் கூட்டத்தில் தாக்கல் செய்யப் படவுள்ளது. தொடர்ந்து இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் பிரதமர் அலுவலகத்துக்கும் தொடர்பு

## புதிய ஆதாரம் வெளியானது

(புதுடில்லி)

மத்திய தொலை தொடர்பு துறை மந்திரியாக ஆ.ராசா இருந்தபோது 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்தது தெரிய வந்தது.

ஏலம் விடாமல் முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஸ்பெக்ட்ரம் உரிமம் வழங்கியதால் அரசுக்கு 1.76 இலட்சம் கோடி ரூபா வருவாய் இழப்பு ஏற்பட்டதாக மத்திய கணக்கு தணிக்கை குழு குற்றம் சாட்டியது.

இதைத் தொடர்ந்து 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்து சி.பி.ஐ விசாரணை நடத்தியது. இந்த வழக்கில் ஆ.ராசா, முன்னாள் அதிகாரிகள், தொழில் அதிபர்கள் ஆகியோர் கைதாகி தற்போது ஜாமீனில் விடுதலையாகி இருக்கிறார்கள். டில்லி சி.பி.ஐ கோர்ட்டில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முடிவு தொடர்பாக பிரதமர் அலுவலகம் ஒப்புதல் அளித்து இருந்ததாக ஆ.ராசா ஏற்கனவே கூறியிருந்தார்.

இதேபோல் 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்து பாராளுமன்ற கூட்டுக் குழுவும் விசாரணை நடத்தி வருகிறது. பாராளுமன்ற கூட்டுக்குழு முன்பு சாட்சியம் அளிக்க தனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று ஆ.ராசா சமீபத்தில் கோரிக்கை விடுத்தார். இதற்கு பாராளுமன்ற கூட்டுக்குழு தலைவர் பி.சாக்கோ அனுமதி அளிக்கவில்லை.

அதேநேரத்தில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஆ.ராசா எழுத்து மூலம் பதில் அளிக்க பாராளுமன்ற கூட்டுக்குழு தலைவர் அனுமதியளித்தார்.

இந்த நிலையில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டு முறைகேட்டில் ஆ.ராசா எடுத்த முடிவுக்கு பிரதமர் அலுவலகம் ஒப்புதல் அளித்து இருந்தது. இதற்காக புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ளது.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான முடிவுக்கு ஒப்புதல் கேட்டு பிரதமர் அலுவலகத்துக்கு ஆ.ராசா கடிதம் எழுதியுள்ளார். இந்த கடிதத்தை பிரதமர் அலுவலகம் ஆய்வு செய்து ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் அலுவலகம் ஒப்புதல் அளித்ததற்கான புதிய ஆவணங்கள் வெளியாகியுள்ளன.

ஆ.ராசா எழுதிய கடிதத்தை பிரதமர் அலுவலகத்தின் முதன்மை செயலாளர் டி.கே.ஏ.நாயர் மற்றும் செயலாளர் புலோக் சட்டர்ஜி ஆகியோர் டிசெம்பர் 29, 2009 அன்று ஆய்வு செய்தனர். பின்னர் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முடிவுக்கு பிரதமரின் அலுவலகம் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்த விவகாரத்தில் பிரதமர் அலுவலக அதிகாரிகள் ஆ.ராசாவின் பல்வேறு செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்து இருப்பது இந்த தகவல் மூலம் தெரிய வருகிறது. இந்த புதிய ஆவணங்கள் 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)




காரைக்குடியில் நடந்த மத்திய பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டத்தில் நிதியமைச்சர் சிதம்பரம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பணக்கார நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 5 ஆவது இடம்

உலகின் முதல் 30 பணக்கார நகரங்களில் மும்பை ஏழாவது இடத்தையும் டில்லி பதினொராவது இடத்தையும் பிடித்துள்ளதாகவும் 122 கோடீஸ்வரர்களுடன் இந்தியா முதல் 10 பணக்கார நாடுகளில் ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளதாக நைட் பிரான்க் வெல்த் ரிப்போர்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய கண்டத்தைப் பொறுத்த வரை அடுத்த பத்தாண்டுகளில் உலகின் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு தனி நபர் சொத்து விகிதம் 88 சதவிகிதம் உயர்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக இந்த நிறுவனத்தின் கணக்கீடுகள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் அமெரிக்க, ஐரோப்பா கண்டங்களில் தான் பணக்காரர்கள் இருப்பார்கள் என்ற நிலை மாறி இந்தியாவும் பணக்காரர்களின் நாடாக விரைந்து வளர்ந்து வருகிறது என கூறப்படுகிறது.

தற்போது நிலவி வரும் பொருளாதார மந்த நிலையிலும் தனி நபர் சொத்து மதிப்பு மும்பையில் 137 சதவிகிதமாகவும் டில்லியில் 120 சதவிகிதமாகவும் அதிகரித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

உலகின் பொருளாதார மையமாக ஆசிய நாடுகள் வளர்ச்சி பெறத் தொடங்கியதிலிருந்தே ஆசிய நகரங்களும் வளர்ச்சியைக் காணத் தொடங்கியுள்ளன. (அ-5)

# போர்க்கால ஒத்திகைக்கு தயாராகும் இந்திய விமானம்

போர்க்கால ஒத்திகைக்கு இந்திய விமானப் படையின் அனைத்து விமானத் தளங்களும் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் போர்க்கால ஒத்திகை இம்முறை மிகப் பாரிய அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டில் நடந்த ஒத்திகைக்குப்பின் இந்திய விமானப் படை பாரிய அளவில் வளர்ந்துள்ளது. இதன் அனைத்துப் பிரிவுகளும் மிக் ஜெட் விமானங்களில் இருந்து எஸ்.யு. எம் கேஜ வரை அனைத்தும் ஒத்திகையில் ஈடுபடவுள்ளன.

இவ் ஒத்திகையில் நேரடியான துப்பாக்கி சுடும் பயிற்சிகளும் இடம்பெறவுள்ளதுடன் இவர்களின் ஒத்திகைகளும் பயிற்சிகளும் அவர்களுடைய வலைத்தொகுப்பில் நேரடியாக ஒளிபரப்பப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு முன்பே இந்த ஒத்திகை குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டாலும் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் இடையே உறவுகளின் சுமுக நிலை குறையத் தொடங்கியுள்ள நிலையில் இந்த ஒத்திகை நடப்பது என்பது எதேச்சையான நிகழ்வாகவே கருதப்படுகிறது. (அ-5)

## பாரதச் செய்தி

# திருப்பதியில் 700 ஏக்கரில் கோ சாலை அமைப்பு

திருப்பதியில் எதிர்காலத்தில் பால் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க புதிய கோ சாலை அமைக்க திருமலை தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. இதற்காக சித்தூர் மாவட்டம் பலம நேரு பகுதியில் 700 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கும் பசுக்களை பராமரிக்க கீழ் திருப்பதியில் ஏற்கனவே கோ சாலை உள்ளது. இங்கிருந்து பெறப்படும் பால் கோவிலில் சாமி அபிஷேகத்துக்கும் அன்னதாக கூடத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் பழைய கோ சாலையில் இடநெருக்கடி இருப்பதால் புதிய கோ சாலை அமைக்க 700 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள பக்தர்கள் வழங்கும் பசுக்கள் இங்கு வளர்க்கப்படுவதோடு பசு வதையை தடுக்க பால் வற்றிய பசுக்கள் வழங்கப்பட்டாலும் அவைகளும் இங்கு பராமரிக்கப்படவுள்ளதாகவும் பசுவதை குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கூகுள் நிறுவனத்தில் இந்தியர் நியமனம்

பிரபல கூகுள் இணையதள நிறுவனத்தின் ஆண்ட்ராய்டு பிரிவின் தலைவராக இந்தியர் சுந்தர் பிச்சை நியமிக்கப்பட்டுள்ளார்.

கையடக்க தொலைபேசி மற்றும் சிறிய வகை மடிக்கணனிகளை பயன்படுத்த உதவும் ஒபரேட்டிங் சிஸ்டமான ஆண்ட்ராய்டு 2008 ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

தற்போது உலகில் உள்ள ஸ்மார்ட் போன்களில் மூன்றில் ஒரு பங்கு போன்கள் ஆண்ட்ராய்டு மூலம் இயங்குகின்றன.

இலவச மென்பொருளான ஆண்ட்ராய்டு முன்னணி மொபைல் போன் நிறுவனங்களான சாம்சங், ஹெச்.டி.சி. உள்ளிட்ட பல நிறுவனங்களின் மொபைல் போன்களில் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் இதன் தலைவராக இருந்த ஆண்டி ரூபினுக்கு பதிலாக சுந்தர் பிச்சை(வயது 41) என்ற இந்தியர் நியமிக்கப்படுவதாக கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி லாரி பேஜ் அறிவித்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டில் கூகுள் நிறுவனத்தில் இணைந்த சுந்தர் கூகுள் குரோம் இணையதள உலவிகள் பிரிவின் தலைவராக பணிபுரிந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

நீயூமா புருட்டஸ்?
~ யூலியசீசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெனிவாவில் போர்க்குற்றக் காண்டம் மறைந்து நின்று தாக்குகிறது இராமர் பூமி

இராமாயணம் என்ற உயர்ந்த இதிகாசம் வாலி வதத்தில் தடம்புரண்டு போகிறது. அவதார புருஷராகக் கருதப்பட்ட இராமர் மறைந்து நின்று வாலியை வதம் செய்தமை ஒரு வீரனுக்கு – அவதார புருஷனுக்கு அழகன்று.

அதிலும் வாலி, சுக்கீரிபனுக்கு துரோகம் இழைக்காதே என்று இராமர் ஒரு சொல்லு சொன்னால் போதும், இராம பக்தனான வாலி அதனை சிரமேற்கொண்டு செய்திருப்பான்.

சுக்கீரிபனைக் காட்டிலும் இராமன் மீது பன்மடங்கு அன்பு கொண்ட வாலியை மறைந்து நின்று தாக்க வேண்டிய தேவை இராமனுக்கு ஏற்பட்டது ஏன்?

இங்குதான் இராமரின் சுயநலமும் வடதேசத்தின் புத்தியும் வெளிப்படுகின்றது.

அவதார புருஷராக இருந்தாலும் அவர் அவதரித்த நிலத்தின் தன்மை அவரையும் விட்டுவிடவில்லை.

இராமா... இராமா... நீயே! என்னைக் காப்பாய் ... பார்ப்பாய்... என்று மலையாய் நம்பியிருந்த வாலியை இராமனே! மறைந்திருந்து கணை தொடுத்து உயிர் பறித்தான் எனும்போது நீதி பிழைத்துப் போகிறது.

இத்தகைய நீதி பிழைப்பு கிஷ்கிந்தா காண்டத்தில் மட்டுமல்ல; ஜெனிவாக் காண்டத்திலும் நடக்கிறது.

ஆம், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவரும் போது, அது ஈழத்தமிழர்களுக்கு விடிவைத் தரும் என்பது தமிழ் மக்களின் பரிபூரண நம்பிக்கை.

இந்திய தேசம் ஈழத்தமிழர்களைக் காக்கும் என்று நாம் நம்பியிருந்தாலும்,

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பிலான தீர்மானத்தை அமெரிக்காவே கொண்டு வருகின்றது.

நாம் நம்பியிருந்தவர் தீர்மானத்தைக் கொண்டு வராவிட்டாலும் பரவாயில்லை. அந்தத் தீர்மானத்தை உள்ளவாறு ஏற்றுக்கொண்டு அதனை சபையேற உதவலாம் அல்லவா?

அதனையும் செய்யாத இந்தியா, மறைமுகமாக அல்லது மறைந்து நின்று தீர்மானத்தை வலுக்குறைக்க – வலுவிழக்கச் செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஓ! நம்பியவர்களை மறைந்து நின்று தாக்குவது இராமருடைய இயல்பு மட்டுமல்ல, அது இராமர் பூமியின் இயல்பும் என்பதை இப்போது தான் உணர முடிகின்றது.

ஜெனிவாவில் நடக்கின்ற போர்க்குற்றக் காண்டத்தில் இந்தியா மறைந்து நின்று தாக்கி குற்றத்தை குறைக்க முன்நிற்பது இராமருக்கு இழுக்குத் தேடிய வாலிவதம் போன்றது.

இது தொடர்பில் இராமர் பூமி தன்னை மாற்றிக் கொள்ளா விடத்து அதுவே இந்திய தேசத்தின் விடைவுக்கான கருக்கட்டலாக அமைந் தாலும் அதுகுறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

# கடன் காலத்தை நீடிக்க இலங்கை வங்கி இணக்கம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவசாயக் கடன்களை மீளச்செலுத்தும் காலத்தினை நீடிக்க இலங்கை வங்கி இணங்கியுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இலங்கை வங்கி விவசாயக் கடனை மீளச் செலுத்தும் காலத்தை நீடிக்க தீர்மானித்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளதாகவும், எவ்வளவு காலத்திற்கு நீடிப்பது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க வில்லை என்றும் இலங்கை வங்கியின் வடபிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 13 ஆயிரத்து 75 ஏக்கர் விவசாய நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் பாரிய நஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால், விவசாயிகள் தாம் விவசாயு நடவடிக்கைகளுக்காக வங்கியில் பெற்ற கடனை மீளச்செலுத்த முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதால் விவசாயக் கடனை மீளச்செலுத்தும் காலத்தை நீடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும், அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)

# மோதலை தவிர்க்கச் சென்றவர் தாக்குதலுக்கு இலக்கானார்

(சாவகச்சேரி)

கணவன்-மனைவி இடையே ஏற்பட்ட குடும்பத் தகராற்றினைத்தீர்த்து வைப்பதற்காக உள்நுழைந்த மாமனார் தலையில் பலத்த அடிகாயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கெற்பிலி மேற்கு மிருசுவிலைச் சேர்ந்த தம்பிராஜா மகேந்திரன் (வயது 46) என்பவரே தலையில் பலத்த காயங்களுக் குள்ளான வராவார்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

கெற்பிலி மேற்கு மிருசுவில் பிரதேசத்தில் வசித்து வரும் குறித்த குடும்பத்தினரிடையே அடிக்கடி குடும்பத்தகராறு கணவன்-மனையிடையே ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினமிரவு குறித்த பிரச்சினையானது பலத்த சத்தத்துடன் இடம்பெற்றதை அடுத்துஅருகில் வீட்டில் வசித்து வந்தகுடும்பஸ்தரின்மாமனார் இப்பிரச்சனையில் தலையிட்டுள்ளார்.

இதனையடுத்து கோப மடைந்த மருமகன் மாமனாரின் தலையில் பலமாக தாக்கியுள்ளார். இதல் படு காயமடைந்த மாமனார் வைத்திய சாலையில். அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் குறித்து அயலவர்கள்பொலிஸாருக்குத்தகவல்வழங்கியுள்ளனர்.

உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குடும்பஸ்தரை கைது செய்து விசாரணைக்குட் படுத்தியுள்ளனர். (செ-2)

# மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழா நாளைபுதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தாய்சேய் நல வைத்திய அதிகாரி திருமதி எஸ். திருமகள், சிறப்பு விருந்தினராக சுவிஸ் அபிவிருத்தி கூட்டமைப்பின் திட்ட முகாமையாளர் திருமதி டீ.டெபோறா ஆகியயோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் பாராட்டு நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு, விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (செ-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி தெற்கு பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உடுவில் பிரதேச செயலக நாட்டு மண்டபத்தில் சே.இராசவல்லவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் பொதுக்கூட்டத்தில் வலி தெற்குப் பிரதேச செயலர், வலி தெற்கு உதவிப் பிரதேச செயலர், வலிதெற்கு பிரதேச செயலகக் கணக்காளர், வலிதெற்கு பிரதேச ஓய்வூதிய உத்தியோத்தர், யாழ். மாவட்ட நிதியச் சங்கத் தலைவர் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் செயற்திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளது. (செ-5)

# பாடசாலை மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டி

(கும்பளை)

மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேல்பிள்ளையின் குருபூசை தின விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுடையே திருக்குறள் மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் சிறுவர், மாணவர்கள் மேலைப் புலோலி சனசமூக நிலையத்தில் விண்ணப்பபடிவங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டி 11 பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

பாலர் பிரிவு (2015 இல் தரம் 1 இல் இணையவுள்ளார்கள்) பாலரிற்கு 12 வரிகளில் ஆத்திசூடி மனனப் போட்டி மற்றும் **என் அன்னை** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் பாலர் மேற்பிரிவு (2014 இல் தரம் 1 இல் இணையவுள்ளவர்கள்) பாலரிற்கு 24 வரி ஆத்தியசூடி மனனப்போட்டியும் தரம் 1 மாணவர்களிற்கு திருக்குறள் முதலாம் அதிகாரம் மனனப்போட்டியும் தரம் 2 மாணவர்களிற்கு திருக்குறள் முதலாம் 2 ஆம் அதிகாரம் மனனப் போட்டியும் தரம் 3 மாணவர்களிற்கு முதல் 3 வரையான திருக்குறள் அதிகாரம் மனனப் போட்டியும் இடம் பெறவுள்ளது.

மேலும் தரம் 4 மாணவர்கள் திருக்குறளின் முதல் 4 அதிகாரங்களையும் தரம் 5 மாணவர்கள் முதல் 5அதிகாரங்களையும் தரம் 6 மாணவர்கள் முதல் 6 அதிகாரங்களையும் தரம் 7 மாணவர்கள் முதல் 7 அதிகாரங்களையும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

தரம் 8, 9 மாணவர்கள் முதல் 9 அதிகாரங்களையும் முதல் மூன்று அதிகாரங்களின் குறட் பொருளையும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும். தரம் 10, 11 மாணவர்கள் முதல் 10 அதிகாரங்களையும் அதில் முதல் 4 அதிகாரங்களின் பொருளையும் ஒப்புவித்தல் வேண்டும்.

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் இன்றோ அல்லது நாளையோ சனசமூக நிலையத்தில் விண்ணப்பபடிவத்தை பெற்று தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5,19)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வெற்றிகரமான வாழ்வுக்கு வழி



✦ இறைவனுக்குப் பணி செய்ய விரும்புபவர் மக்களுக்கும் உலக உயிர்களுக்கும் பணிசெய்யவேண்டும். ஈசனுக்குத் தொண்டு செய்பவரே உத்தமத் தொண்டராவார்.

✦ ஏழைகளிடமும் பலமற்றவர்களிடமும் நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காண்பவனே இறைவனை உண்மையாக வணங்குபவனாவான்.

✦ கோயிலில் இறைவனை வணங்குபவனிடம் அடையும் மகிழ்ச்சியை விட ஏழைக்குப் பணி செய்பவனிடம் இறைவன் அடையும் மகிழ்ச்சி மேலானதாகும்.

✦ புண்ணியத்தலங்களை தரிசித்தவனிடம் தன்னலம் இருந்தால் இறைவன் அவனிடம் மிகத் தொலைவிலேயே இருப்பான். தன்னலத்தை மறந்து பொதுநலத்துடன் வாழவேண்டும்.

✦ மனத்தளர்வு வெற்றிகரமான வாழ்வுக்கு வழிவகுக்காது. உறுதியோடும் இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதுவே மேலான நன்மையை பெறவைக்கும்.

✦ பிறருக்கு வழங்கவே கைவ் இறைவன் படைத்தான். பட்டினியாகக் கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்குக்கொடு. பிறருக்கு வழங்குவதால் நீ முழுமையடைவதுடன் தெய்வமாகவும் மாறுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மொகாலியிலும் மண்டியிட்டது ஆஸி.

## தொடர் இந்தியா வசம்

மொகாலியில் நடைபெற்ற இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் 408 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக ஆடிய இந்திய அணி 499 ஓட்டங்களைக் குவித்தது. தவான் 187 ஓட்டங்களும் முரளிவிஜய் 153 ஓட்டங்களும் எடுத்தனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக சிடில் 5 விக்கெட்டுகளையும், ஸ்ராக் 2 விக்கெட்டுக்களையும் ஹென்றிக்ஸ், லயன், ஸ்மித் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்.



91 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலியா 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்ட தொடங்கிய சிறிது நேரத்தில் லயன் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை ஓஜா கைப்பற்றினார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 89 ஆக இருந்தது. அடுத்து களம் வந்த கிளார்க், 18 ஓட்டங்களுடன் ஜடஜா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது அணி119 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மிகவும் அபாரமாக ஆடி வந்த ஹியூக்ஸ் 69 ஓட்டங்களைப் பெற்றபோது அஸ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களான ஹடினும், ஹென்ரிக்சும் இணைந்து ஆடினார். ஹென்ரிக்ஸ் 2 ஓட்டங்களுடன் ஜடேஜா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின் வந்த சிடில் 13 ஓட்டங்களுடன் ஓஜா பந்தில் போல்டானார். அடுத்ததாக வந்த ஸ்டார்க், ஹடினுடனுன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்டத்தை உயர்த்தப் போராடினார். இந்த ஜோடியும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அணி 179 ஓட்டங்களைப் பெற்றபோது ஹடின் 30 ஓட்டங்களுடன் அஸ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த டூகெற்றி ஸ்டார்க்உடன் சேர்ந்து ஆடினார். இருவரும் இறுதி விக்கெட்டுக்காக 44 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றபோது இந்த ஜோடி ஜடஜாவினால் பிரிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாவது இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து அவுஸ்திரேலிய அணி 223 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் புவனேஸ்குமார், ஜடஜா தலா 3 விக்கெட்டுக்களையும், அஸ்வின், ஓஜா தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்சுடன் சேர்த்து 133 என்ற வெற்றி இலக்குடன் ஆடிய இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியைச் சுவீகரித்தது.

துடுப்பாட்டத்தில் முரளி விஜய் 26, புஜாரா 28, கோலி 34, சச்சின் 21 ஓட்டங்களைப் பெற்றனர். டோனி 18 ஓட்டங்களையும் ஜடஜா 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்ற னர்.

ஆட்ட நாயகனாக இந்திய அணியின் அறிமுக வீரரும் அதிரடியாக சதம் அடித்து சாதனை படைத்த தவான் தெரிவு செய்யப்பட்டார்.

# போராடுகிறது பங்களாதேஷ்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் குமார் சங்கக்கார, டினேஷ் சந்திமாலின் சதங்களின் உதவியோடு இலங்கை அணி இக்கட்டான நிலையில் இருந்து மீண்டது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பாடியிருந்த பங்களாதேஷ் அணி 240 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார 139 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 102 ஓட்டங்களையும் குலசேகரா 22 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியில் பெறப்பட்ட சதம் குமார் சங்கக்காரவின் 33ஆவது சதமென்பதோடு, தொடர்ந்து 3 இனிங்ஸ்களிலும் அவர் சதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சொஹக் கஷி 3 விக்கெட்டுக்களையும், றொபியுல் இஸ்லாம், றூபெல் ஹொசைன், அபுல்ஹசன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், மஹமதுல்லஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவுவரை4 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. பங்களாதேஷ் சார்பாக இக்பால் 59 ஓட்டங்களையும், இஸ்லாம் 48 ஓட்டங்களையும், ஹக் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹேரத் 3 விக்கெட்டுக்களையும் எறங்க 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். 5 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## ஒருநாள்தொடர் இலங்கை அணி

*இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*23ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள தொடருக்கான 16 பேர் கொண்ட குழாம் வருமாறு,*

*அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், திலகரட்ண டில்ஷான், குஷால் ஜனித் பெரேரா, குமார் சங்கக்கார, லஹிரு திரிமன்ன, ஜீவன் மென்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, லசித் மலிங்க, சச்சித்திர சேனநாயக்க, உபுல் தரங்க, கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, ஷமின்ட எரங்க, சச்சித்திர பத்திரன*

## இங்கிலாந்து — நியூசிலாந்து 2 ஆவது டெஸ்ட் சமநிலை

நியூசிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியுற்று நிறைவடைந்துள்ளது. வெலிங்டனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஜொனதன் ட்ரொட்டின் 121 ஓட்டங்கள், நிக் கொம்ப்டனின் 100 ஓட்டங்கள், மற் பிரயரின் 82 ஓட்டங்கள், கெவின் பீற்றர்சனின் 73 ஓட்டங்களின் துணையோடு 465 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக புரூஸ் மார்ட்டின் 4 விக்கெட்டுக்களையும், ட்ரெண்ட போல்ட்ற், நீல் வக்னர், கேன் வில்லியம்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சார்பாக பிரெண்டன் மக்கலம் 69 , பிஜே. வற்லிங் 60, கேன் வில்லியம்ஸன் 42 ஓட்டங்களையும் பெற்ற போதிலும், அவ்வணி 254 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 5 விக்கெட்டுக் களையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டீவன் ஃபின் இருவரும் தலா 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பொலோ ஒன் முறையில் மீண்டும் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை நான்காம் நாள் முடிவில் பெற்றிருந்த போதிலும், 5ஆம் நாள் ஆட்டம் மழை காரணமாக இடம்பெறாததால் போட்டி வெற்றி தோல்வியின்றிமுடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக கேன் வில்லியம்ஸன் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும், பீற்றர் ஃபுல்ற்றன் 45 ஓட்டங்களையும், றொஸ் டெய்லர் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன், மொண்டி பனசர் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். 3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

# சாதனையுடன் சாதித்தது தென்னாபிரிக்கா

## அப்ரிடியின் அதிரடி வீணானது

தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் இடையிலான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா சாதனையுடன் வெற்றிபெற்றது.

ஜோகனஸ்பர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 5 விக்கெட் இழப்புக்கு 343 ஓட்டங்களைக் குவித்தது. முதல் 15 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 51 ஓட்டங்களை மாத்திரமே எடுத்த தென்னாபிரிக்கா, அதன்பின் அம்லா (122 ஓட்டங்கள் - 113 பந்து, 9 பவுண்டரி, ஒரு சிக்சர்), அணித் தலைவர் டிவில்லியர்ஸ் (128 ஓட்டங்கள்- 108 பந்து, 12 பவுண்டரி, 3 சிக்சர்) ஆகியோரின் சதம் மற்றும் பாப் டு பிளிஸ்சிஸ்சின் (45 ஓட்டங்கள் - 19 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்) அதிரடி துணையுடன் 300 ஓட்டங்களை எளிதாக கடந்தது. மேலும் அம்லா-டிவில்லியர்ஸ் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 238 ஓட்டங்களை திரட்டி உலக சாதனை படைத்தது. ஒரு நாள் போட்டியில் 3ஆவது விக்கெட்டுக்கு ஓர் ஜோடியின் அதிகபட்ச ஓட்டம் இதுவாகும். இதற்கு முன்பு 1999 ஆம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக இந்தியாவின் சச்சின்-டிராவிட் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 237 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. இந்த 14 ஆண்டுகால சாதனை முறியடிக்கப்பட்டது.



தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி அப்ரிடியின் அதிரடியான ஆட்டம் மூலம் ஒரு கட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தும் நிலையைக் கூட ஏற்படுத்தியது. ஆனால் அப்ரிடி ஆட்டமிழக்க போட்டி தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. துடுப்பாட்டத்தில் முகமது ஹபீஸ் (57 ஓட்டங்கள், 6 பவுண்டரி, 3 சிக்சர்), அப்ரிடி (88 ஓட்டங்கள் - 48 பந்து, 4 பவுண்டரி, 7 சிக்சர்), வஹாப் ரியாஸ் (45 ஓட்டங்கள்) பெற்றனர். பாகிஸ்தான் 48.1 ஓவர்களில் 309 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

வழக்கமாக தென்னாபிரிக்க வீரர்கள் பச்சை நிற உடை அணிந்து விளையாடுவார்கள். ஆனால் இந்த ஆட்டத்தில் பிங்க் நிற உடையுடன் களம் இறங்கினர்.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக்காக அவர்கள் பிங்க் உடையுடன் ஆடியதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

4ஆவது [illegible] திகதி நடைபெறும்.

# இந்திய அணியின் பயிற்சியாளராக மீண்டும் பிளெட்சர்



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருப்பவர் டங்கன் பிளெட்சர் (வயது 64). இந்தியாவுக்கு உலகக்கிண் ணம் உட்பட பல வெற்றிகளை பெற்றுத் தந்த முன்னாள் பயிற்சியாளர் கிர்ஸ்டனின் பரிந்துரையின்பேரில் பிளெட்சர் இப்பொறுப்புக்கு வந்தார். ஆனால், அவரது வழிகாட்டுதலில் உள்ள இந்திய அணி குறிப்பிட்டு சொல்லும்படியான வெற்றிகளை பெறவில்லை.

தொடர்ந்து தடுமாறிய இந்திய வீரர்கள், முக்கிய டெஸ்ட் தொடர்களை கோட்டை விட்டனர். இதனால் பயிற்சியாளர் பொறுப் புக்கு பிளெட்சர் லாயக்கில்லாதவர் என்ற குற் றச்சாட்டு எழுந்தது. அவரது பதவிக்காலத் தினை நீட்டிக்க கூடாது என்றும் வலியு றுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் பிளெட்சரின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. இதையடுத்து பி.சி.சி.ஐ. செயற்குழு கூட்டம் மும்பையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், பிளெட்சரின் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அணி அடுத்து தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடரில் பிளெட சரிடம் இருந்து சிறந்த பங்களிப்பை பி.சி.சி.ஐ. எதிர்பார்க்கிறது.

பிளெட்சரின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட் டது தொடர்பாக கேள்வி எழுப்பிய முன்னாள் வீரர் கவாஸ்கர், "தொடர்ந்து 10 டெஸ்ட் போட்டிகளில் தோல்வி ஏற்பட்ட பிறகும் பிளெட்சர் மீண்டு வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராங் லம்பார்ட் 200ஆவது கோல்

வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணிக்கு எதிரான பிறிமியர் லீக் கால்பந்து போட்டியில் செல்சி வெற்றிபெற்றது.

பிறிமியர் லீக் கால் பந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் செல்சி, வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணிகள் மோதின முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்திய செல்சி அணிக்கு பிராங் லம்பார்ட் (19 ஆவது நிமிடத்தில்) ஒரு கோல் அடித்தார்.




இதற்கு வெஸ்ட் காம் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை முடிபில் செல்சி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நேற்றுமுன்தினம் தனது 595ஆவது போட்டியில் பங்கேற்று ஒரு கோல் அடித்த செல்சி அணியின் பிராங் லம்பார்ட் தனது 200 ஆவது கோலை பதிவு செய்தார். தவிர இந்த ஆண்டு பிறிமியர் லீக் கால்பந்து தொடரில் தனது 12ஆவது கோலை லம்பார்ட் பதிவுசெய்தார்.



தெல்லிப்பழை கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15 வயதுப் பெண்களுக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி 25:11, 25:11 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. 3-ம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணாசலம் மகா வித்தியாலயமும், மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் அருணாசலம் மகா வித்தியாலய அணி 25:23, 20:25, 18:25 என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று 3-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.



வவுனியாவில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டை பயிற்சி முகாமின் போது...

# சண்டிலிப்பாய் கோட்ட வலைப்பந்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியன்



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இதில் 15 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவாகியது. (22)

# ஆவரங்கால் மத்திய அணி சம்பியன்



அமரர் கனகசபை கேசவமூர்த்தி ஞாபகார்த்தமாக கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்தி- ஆவரங்கால் இந்து இளைஞர் ஆகிய அணிகள் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 25:21, 23:25, 25:19, 25:17 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

# போட்டிக்கு விண்ணப்பிக்குக

"யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் மெய்வல்லுநர் விளையாட்டு விழா எதிர்வரும் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே போட்டியில் பங்குபற்றும் வீரவீராங்கனைகள் அதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் செ.ரமணனிடம் பெற்று அதனைப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# தெல்லிப்பழை கோட்ட கரப்பந்தாட்டம்

தெல்லிப்பழை கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 19 வயதுப் பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 21:25, 25:22, 26:24 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. 3-ம் இடத்தை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

# மத்திய அரசின்...

பாட்டையும் எடுக்காதது வருத்தமளிக்கிறது என தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு மௌனம் சாதிப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் தமிழக முதல்வர் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில், நடத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழகம் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும், அதனை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகின்றது என்றும் அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு, மத்திய அரசு ஆதரவு கொடுக்க வேண்டும். அத்துடன், அமெரிக்கத் தீர்மானத்தை மேலும் வலுப்படுத்தத் தேவையான மாற்றங்களையும் சுதந்திரமான முறையில் செய்ய வேண்டும்.

கடந்தாண்டு ஜெனிவாவில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகும், இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்தத் தருணத்தில், இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பாக இந்தியா எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்காததது வருத்தமளிக்கிறது.

ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிப்பது தொடர்பாகவும், மத்திய அரச மௌனியாக இருப்பது அதிருப்தியளிப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஜெயலலிதா அமெரிக்காவின் தீர்மானத்திற்கு தைரியமாக ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (செ-1)

# இலங்கை...

தொடர்பில் நம்பகரமான விசாரணையை வலியுறுத்திய இந்தியா, அது தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா முன்வைத்த தீர்மான வரைவை திருத்துவது குறித்து புதுடில்லி வாஷிங்டனுடன் தொடர்பு கொண்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் இறைமையை மதிக்கும் வகையில் இத்தீர்மானம் அமைய வேண்டும் என அமெரிக்காவிடம் இந்தியா வலியுறுத்தவுள்ளதாக தெரிய வருகின்றது.

அதேவேளை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் வழங்கப்படவுள்ள உதவிகளோ அல்லது இப்பணியக அதிகாரிகளின் இலங்கைக்கான பயணங்களோ இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இந்தியா சுட்டிக்காட்டக்கூடும் என டெக்கான் ஹெரால்ட் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் போராட்டம்...

எதிராகவும் தமிழீழம் அமைக்க பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் மாணவர்கள், பொதுமக்கள் போராட்டங்களை கடந்த ஒரு வார காலமாக நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் டில்லியில் தொலைக்காட்சியொன்றுக்கு பேட்டியளித்த இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம்,

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானம் தேவையற்றது. இலங்கையில் சர்வதேச சமூகத்தின் தலையீடு தேவையில்லை. நாங்களே ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றோம்.

சர்வதேச ரீதியிலான ஒரு தீர்மானம் என்பது தமிழ்நாடு மற்றும் இலங்கையில் உணர்வுகளை கிளப்பிவிடக் கூடியதாகவே இருக்கும்.

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களை வெளிநாடு வாழ் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே தூண்டி விடுகின்றனர்.

இந்தப் போராட்டங்கள் தீவிரவாதச் செயல்களைப் போலவே இருக்கின்றது.

அப்பாவி இலங்கையர்களைத் தாக்குகின்றனர். இதைத்தான் இலங்கையில் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கடைப்பிடித்தனர்.

எனவே இப்படிப்பட்ட வன்முறை மூலம் எந்தத் தீர்வையும் உருவாக்கி விட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## கடன் பெறுவது...

நாடளாவிய ரீதியில் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் நாட்டுக்கு அதிகளவு வருமானம் கிடைக்கின்றது.

மத்தல பகுதியில் இவ்வாறானதொரு விமான நிலையம் அமைப்பெறும் என யாரும் எதிர்பார்திருக்கமாட்டார்கள். ஆனால் இலங்கையின் 2-வது சர்வதேச விமான நிலையமாக இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வெளிநாட்டுக்கு விற்றுவிட்டதாக சிலர் பொய்யான தகவல்களை தெரிவித்து வருகின்றனர். ஆனால் அதில்எவ்வித உண்மையும் கிடையாது. ஒன்றை விட்டு இன்னொன்றை புதிதாக நிர்மாணிப் பவன் நான் அல்ல. இதனையும் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் என்றார் ஜனாதிபதி. (செ-11)

## தி.மு.க -காங்கிரஸ் பேச்சு

இலங்கை விவகாரம் தொடர்பாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியை மூத்த மத்திய அமைச்சர்கள் குழுவினர் நேற்று சந்தித்து 2 மணி நேரங்களுக்கு மேல் பேசியுள்ளனர். பேச்சின் முடிபில் ஒரு முடிபு ஏற்படவில்லை.

ஜெனிவாத் தீர்மானத்தில் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை கோரும் திருத்தத்தை இந்தியா கோராவிட்டால் மத்திய கூட்டணியில் திமுக தொடராது என்று கருணாநிதி கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, நிதி அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத் ஆகியோர் இது குறித்து கருணாநிதியுடன் நேற்று மாலை பேசினர்.

இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் பிரதமருக்கு தெரியப்படுத்தப்படும் என்று கூட்டம் முடிந்த பின் அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, வலுவான தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அதில் இனப் படுகொலை மற்றும் சர்வதேச சுயாதீன விசாரணை ஆகியவை இடம்பெறவேண்டும் என்றும் கூறினார். (செ)

## தமிழகம் உக்கிரம்...

மதுரையில் கோரிப்பாளையம் தேவர் சிலை எதிரில் காங்கிரஸ் பிரமுகருக்கு சொந்தமான பெட்ரோல் நிலையத்தில் நேற்று மாலை 8 மணி அளவில் ஒரு இளைஞர் ஒருவர் முகத்தை கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு, ஈழ ஆதரவு கோசத்துடன் மண்ணெண்ணெயை உடம்பில் ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொண்டார்.

இதன் போது ஈழத்திற்கு ஆதரவாக கோஷம் எழுப்பியபடி தீ வைத்துக் கொண்ட அவர் சம்பவ இடத்திலே உடல் கருகிப் பலியாகினார்.

அவரது உடல் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் உணர்வாளர்கள் பலர் மருத்துவமனை வாசலில் குவிந்து அவருக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

தீக்குளித்து பலியான இளைஞர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது பற்றிய விபரம் உறுதியாக வெளியிடப்படவில்லை.

இதேவேளை தமிழ்நாடு சென்னையில் ஆளுநர் மாளிகை, இலங்கை துணைத்தூதரகம், விமான நிலையத்தை முற்றுகையிட முயன்ற மாணவர்கள் 1000ற்கும் மேற்பட்டோரை நேற்று பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையக் கூட்டத்தில் இலங்கைக் எதிராக இந்தியா உறுதியான தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தி தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் ஒரு வாரத்தைக் கடந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் மீதான விவகாரத்தில், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், சென்னையில் 25 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை சைதாப்பேட்டையில் இருந்து பேரணியாக புறப்பட்ட 300 மாணவர்களை தடுத்து நிறுத்திப் பொலிஸார் கைது செய்தனர்.

மேலும்சென்னை நுங்கம்பாக்கத்தில் இருந்து பேரணியாகச் சென்று இலங்கை துணைத் தூதர கத்தை முற்றுகையிட முயன்ற கே.கே நகர் மீனாட்சி பொறியியல் கல்லூரி மாணவர்கள் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

அப்போது, இலங்கைக்கு எதிராக இந்தியாவே தனித் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று மாணவர்கள் வலியுறுத்தினர்.

சென்னை விமான நிலையத்தை பச்சையப்பன் கல்லூரி 500 மாணவர்கள் நேற்று முற்றுகையிட முயன்றனர். அவர்களை காவல் துறையினர் தடுத்து நிறுத்தியதால் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மாணவர்களின் தொடர் போராட்டத்தால் அனைத்து இடங்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டதால் சென்னை பரபரப்புடன் காணப்படுகின்றது.

இதேவேளை தமிழகம் முழுவதும் நாளை 20-ம் திகதி புதன்கிழமை ஒரு கோடி மாணவ மாணவியர்கள் உண்ணாவிரத போராட்டம் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இந்.-இலங்கை...

நடைபெறும் இந்தப் பாதுகாப்பு கலந்துரையாடலில் இரு நாடுகளும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை பரிமாறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சென்னையில் பிக்கு...

தாக்கினார்.

பின்னர் உணர்வாளர்கள் அங்கிருந்து சென்று விட்டனர். அதற்குள் தகவலறிந்து வந்த பொலிஸார் புத்த பிக்குவை காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து விசாரித்துவருகின்றனர். (செ)

## இலங்கை நிரா...

தொடர்பில் அது பரிசீலித்து வருகின்றது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பரிந்துரைகளை இலங்கை நிராகரித் துள்ளமைக்கு மேலும் சில நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், அவற்றை இலங்கை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு இலங்கை பிரதிநிதிகள் எதிர்ப்பை வெளியிட்டபோதே மேற்படி நாடுகளின் பிரதிநிதிகள் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு இலங்கைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 22-ம் கூட்டத் தொடரில் இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் நாளை மறுதினம் 21ஆம் திகதி விவாதமும் வாக்களிப்பும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)



காலம் : மார்ச் 21, 22, 23, 24 - 2013
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
நான்கு நாட்களுக்கு

நேரம்: மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
பார்வையாளர்களின் ஆசனங்களுக்கான பதிவுகளை
யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2393 — திருமறைக் கலாமன்றம்

(இ-2734)



BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English With Grammar - Quick Learning Course** *(1½ Months)*

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Diploma in English** *(2 Months)*

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி
ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன்
IELTS-4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission
இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

Batch I - 23.03.2013 Batch II - 25.03.2013 Batch III - 30.03.2013 Batch IV - 01.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074



பணிப்பெண் தேவை

அரச பணி புரியும்
குடும்பமொன்றுக்கு 30 வயது
தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட
பணிப்பெண் தேவை. (இ)

தொடர்பு: 0215671531



Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical

Addmissions Open

Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/=
உடனடி வேலை வாய்ப்பு!!
16-03-2013ல் இருந்து

Visalam — Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 | 075 979 9695
Email: admin@visalamholdings.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org